விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 17 திங்கட்க்கிழமை (31.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 102

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## சர்வதேச விசாரணையை மறுப்பின்

# இலங்கை மீது பொருளாதார தடை



## எச்சரிக்கிறார் சூகா

ஐ.நா மனித உரிமை பேரவையினால் மேற்கொள்ளப்படவுள்ள சர்வதேச விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தவறின் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க முடியுமென ஐ.நா நிபுணர்குழுவின் உறுப்பினர் யாஸ்மின் சூகா எச்சரிக்கை செய்துள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக தாருஸ்மான் தலைமையில் நிறுவப்பட்ட நிபுணர் குழுவில் அங்கம் வகித்த சூகா, எவ்வாறான தடைகள் விதிக்கப்படும் என்பதனை குறிப்பிட முடியாத போதிலும் தடைகள் விதிக்கப்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் பாதகமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும். அரச அதிகாரிகளுக்கான பயணத் தடை, வெளிநாட்டு முதலீட்டு தடை, சொத்து முடக்கம் போன்ற பல்வேறு வழிகளில் தடைகள் விதிக்கப்படலாம்.

எனவே சர்வதேச நிலைமைகளை கவனத்தில் கொண்டு மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்

20 ஆம் பக்கம் பார்க்க..

## மேல், தென் மாகாணசபை தேர்தல் இறுதி முடிவுகள்

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய மேல் மாகாண சபை மற்றும் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய தென் மாகாண சபை ஆகிய இரண்டு சபைகளுக்குமான போனஸ் ஆசனங்களை உள்ளடக்கிய ஆசனங்களின் விபரங்கள் பின்வருமாறு,

மேல் மாகாண சபை

| கட்சி | வாக்கு எண்ணிக்கை | ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 1,363,675 | 56 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 6,79,682 | 28 |
| ஜனநாயகக் கட்சி | 2,03,767 | 09 |
| மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) | 1,56,208 | 06 |
| ஜனநாய்க மக்கள் முன்னணி | 51,000 | 02 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 49,515 | 02 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 15,491 | 01 |

தென் மாகாண சபை

| கட்சி | வாக்கு எண்ணிக்கை | ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 6,69,408 | 33 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,10,431 | 14 |
| மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) | 1,09,032 | 05 |
| ஜனநாயக மக்கள் முன்னணி | 75,532 | 03 |

முன்னர் வெளியான தகவல் உள்ளே... (20ஆம் பக்கம் பார்க்க...)

## இராணுவ சுற்றிவளைப்பு வடக்கில் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இராணுவத்தினரின் திடீர் சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்து இடம் பெற்றுவரும் நிலையில் நேற்றைய தினம் யாழ். மாவட்டத்தில் கடற்கரையை அண்மித்த இரண்டு இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 13ஆம் திகதி கிளிநொச்சியில் தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தையடுத்து வடக்கில் இராணுவத்தினரின் திடீர் சுற்றிவளைப்

20 ஆம் பக்கம் பார்க்க..

## இந்திய மீனவர்களுக்கு இனிப்பு வழங்கிய இலங்கை படையினர்

(கொழும்பு)

இந்திய மீனவர்களுக்கு கச்சதீவுக்கு அருகில் மீன்பிடிக்க அனுமதித்த இலங்கை கடற்படையினர், இந்தியா மீனவர்களுக்கு குளிர் பானங்களையும் இனிப்புகளையும் வழங்கியுள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் நேற்று மேற்கொண்ட இந்த நடவடிக்கை பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இராமநாதபுரம், ஜெகதாப்பட்டினம் உட்பட பல பகுதிகளில்

20 ஆம் பக்கம் பார்க்க..

## அரசுக்கு மக்கள் பாடம் கற்பிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் சட்டவிரோத செயல்களுக்கு மக்கள் நேற்று நடைபெற்ற தேர்தலில் சிறந்த

20 ஆம் பக்கம் பார்க்க..

## வவுனியா மாமடு குளத்தில் மூவர் நீரில் மூழ்கி பலி!

(வவுனியா)

வவுனியா மாமடு குளத்தில் நேற்றுக் காலை மூவர் நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளனர் என மாமடு பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்றுக் காலை வவுனியா பிரதேசத்தில் இருந்து நான்கு யுவதிகளும் இரு இளைஞர்களும் மாமடு குளத்தினை பார்ப்பதற்காக சென்றிருந்தனர்.

இவர்கள் மீன் பிடிக்காக பயன்படுத்தும் சிறிய வள்ளத்தில் ஏறி நீரில் செல்ல முற்பட்டபோது வள்ளம் கவிழ்ந்ததில் நீரில் மூழ்கியுள்ளனர்.

எனினும் இவர்களில் இரு யுவதிகளும் ஒரு இளைஞனும் நீந்திக் கரை சேர்ந்த நிலையில் இரு யுவதிகளும ஒரு இளைஞ

20 ஆம் பக்கம் பார்க்க..

புதிய -
அதிரடியான - அபூர்வமான - அரிய -
பொன்னான வாய்ப்புக்கள்

« கனடா மிகப்புதிய வரவு :-

1. வைத்திய உத்தியோகத்தர், தாதிகள், இயன்மருத்துவர், மருந்தாளர், தனியார் துறை / அரசாங்க துறை 2 வருட அனுபவம். IELTS தேவையில்லை 2 வருடத்தில் PR பெறலாம் 50 வயதிற்குக்கீழ்.
2. மின்னிணைப்பாளர், பிளம்பர், தச்சர், வெல்டர் IELTS தேவையில்லை 50 வயதிற்குள்.
3. சமையலாளர் IELTS தேவையில்லை 50 வயதிற்குள்.

« இத்தாலி இலகுவில் போகலாம்.
« ஆஸி குடும்பமாகச் செல்ல பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டிய தேவையில்லை.
« Student Visa, Visit Visa நம்பகரமான கைதேர்ந்தவர்கள் நாங்கள் மட்டுமே.

7 நாட்களுக்கும் திறந்திருக்கிறோம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 790 4941
(C-6932)



## கடற்பரப்பில் மீன்பிடிக்க மீண்டும் பாஸ் நடைமுறை

### இராணுவத்தினர் அதிரடி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கடற்பரப்பில் மீன்பிடிக்க இன்று முதல் பாஸ் நடைமுறை மீண்டும் அமுலுக்கு வருவதாக இராணுவத்தினர் நேற்று அதிரடியாக உத்தரவு போட்டுள்ளனர்.

மீன்பிடிக்க கடலுக்குள் செல்வதற்கு முன்பாக இராணுவத்தினரிடம் மீனவர் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், கடலுக்குள் செல்லும் படகு இலக்கம் என்பன பதியப்பட வேண்டும் எனவும் கடலுக்குள் சென்று கரை சேரும்போது இராணுவத்தினரிடம் சென்று கரைசேர்ந்த நேரத்தையிட்டு கையொப்பமிடப்பட வேண்டும் என்றும் மீனவர்களுக்கு இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இராணுவத்தினரின் இந்த உத்தரவினை சற்றும் எதிர்பார்த்திராத மீனவர்களும் மீனவ சங்கப் பிரதிநிதிகளும் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

போர்க்காலத்தில் இருந்த

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்ள த.தே.கூட்டமைப்பு தடையாகவுள்ளது

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

எமது பகுதியின் அபிவிருத்தியையும் மக்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டையும் முன்னெடுக்க முடியாதவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே குழப்பி வருகின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் சபை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபை முறைமைக்கு ஊடாகவே அரசியல் உள்ளிட்ட எமது மக்களின் நாளாந்த பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வினைக் காண முடியும்.

எமது மக்கள் வாழ்வியல் எழுச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் அபிவிருத்தி அடைந்த ஓர் உயரிய சமூகமாக மேலும் நிமிர வேண்டுமென்பதுடன், எவரிடமும் எதற்கும் கையேந்தி நிற்கும் வாழ்க்கை முறை முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு 13 ஆவது திருத்தச் சட்டமே சிறந்தது என இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்து நாம் வலியுறுத்தி வந்தபோதிலும், அது காலம் கடந்தது, உழுத்துப் போனது, ஒன்றுக்கும் உதவாதது, அரைகுறையானது என்று கூறியவர்கள் இன்று அதற்காக குரல் கொடுத்து வருகின்றனர்.

வடமாகாணசபை ஊடாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளின் உட்கட்டுமானம் உள்ளிட்ட பல்வேறுபட்ட அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும்.

ஆனால், குறித்த அபிவிருத்தி செயற்திட்டங்களை கிடைக்கப் பெற்ற மாகாணசபையூடாக முன்னெடுக்க முடியாமலும், செயற்படுத்த முடியாமலும், பல்வேறுபட்ட நொண்டிச் சாட்டுக்களை கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வைக்கோல் பட்டடை நாயாக தாமும் செய்யாமல், மற்றவர்களையும் செய்ய விடாது தடுத்து வருகின்றனர்.

1987-ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அப்போதைய தமிழ்த் தலைமைகள் ஏற்றுக் கொண்டிருந்தால் எமது மக்கள் முள்ளிவாய்க்கால் வரையான அழிவுகளை சந்திருக்க மாட்டார்கள்.



இணக்க அரசியல் ஊடாக எமது மக்களுக்கான அரசியல் உள்ளிட்ட அதிகாரங்களை பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் ஏதுமில்லையென்பதை நான் திடமாகக் கூறுவேன்.

இணக்க அரசியல் ஊடான எமது நோக்கம் மக்களுடைய பிரச்சினைக்கு உரியதீர்வினைக் கண்டு அவர்களுக்கு நிம்மதியான, கௌரவமான வாழ்வை பெற்றுக் கொடுப்பதே ஆகும்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுயலாபத்திற்காக பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் தீராப் பிரச்சினையாக வைத்துக் கொள்ளவே விரும்புகின்றனர் எனத் தெரிவித்த அமைச்சர் அவர்கள், இதுவிடயம் தொடர்பில் எமது மக்கள் உண்மையான நிலைவரங்களை தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். (செ-6)

# அமெரிக்காவில் நிலநடுக்கம்



(வாஷிங்டன்)

அமெரிக்காவில் தெற்கு கலிபோர்னியாவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு அருகே அமைந்துள்ள லா ஹாப்ராவில் கடந்த வெள்ளிக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நில அதிர்ச்சி 5.1 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தால் லா ஹாப்ரா புறநகரில் கட்டிடங்கள் குலுங்கின. ஆனால் பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை.

இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு வேளையில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ராவ்லாண்ட் ஹைட் என்ற இடத்தில் நடந்த நிலநடுக்கத்தின்போது 100 முறைக்கு மேல் பூமி குலுங்கியதாக தெரிகிறது. இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.1ஆக பதிவாகி உள்ளது. ஆனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (செ-6)

விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532

# இனம் தெரியாத நபர்கள் ஆட்டோ சாரதி மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் வைத்து ஆட்டோச் சாரதி மீது நேற்றிரவு இனம்தெரியாத நபர்களினால் கடுமையாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த ஆட்டோச் சாரதி யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, யாழ்.கொக்குவில் பொற்பதி பகுதியைச் சேர்ந்த வீரபாகு ராஜ்குமார் (வயது -47) என்ற குடும்பஸ்தர் யாழ்.நகர்ப் பகுதியில் தரித்து நின்று வாடகைக்கு ஆட்டோ ஓட்டுபவர்.

தொழில்நிமித்தம் சென்றுவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து பிறவுண் வீதியூடாக கொக்குவில் பொற்பதி பகுதியிலுள்ள தனது வீடு நோக்கி இரவு 8.50 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது பிறவுண் வீதி இரண்டாம் ஒழுங்கை சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இடைமறித்து கைகளினாலும் கால்களினாலும் அடித்தும், உதைத்தும் ஆட்டோச் சாரதி மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலையடுத்து நிலைகுலைந்து போன மேற்படி ஆட்டோச் சாரதி வீதியோரமாகியிருந்த மின்சார கம்பத்தினை பிடித்து எழுந்து நின்றுள்ளார்.

இந்நிலையில் தாக்குதல் மேற்கொண்ட மேற்படி நபர்கள் இருவரும் மீண்டும் வந்து தாம் அணிந்திருந்த தலைக்கவசத்தினால் கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதனால் குறித்த ஆட்டோ சாரதியின் தலை வெடித்து வீதியில் இரத்தம் கொட்டியதோடு முகப் பகுதியில் பாரிய காயங்களும் ஏற்பட்டன.

கடுமையான தாக்குதலை தாங்க முடியாது மூச்சடங்கி குறித்த ஆட்டோ சாரதி கீழே விழுந்ததும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் தப்பித்து சென்றுள்ளனர்.

இதனையடுத்து அயலவர்கள் குறித்த ஆட்டோ சாரதியை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததோடு யாழ்ப்பாண பொலிஸாருக்கும் அறிவித்தனர்.

மேற்படிச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

விண்ணக வாழ்வின்

1 - ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02 . 01 . 1966

விண்ணில் 31 . 03 . 2013

அமரர் சிங்காரம் சுரேந்திரன் (சுரேஸ்)

இரக்கம் நிறைந்த இறைவா!

இவ்வுலக வாழ்விலிருந்து விண்ணுலகத்துக்கு அழைத்துக்கொண்ட உமது அடியான் சிங்காரம் சுரேந்திரன் (சுரேஸ்) அவர்களின் பாவங்களை மன்னித்து, உமது வான் வீட்டில் ஏற்று நித்திய இளைப்பாற்றியை அளித் தருளும்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 2014.03.31 இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குகொண்டு இவருக்காகப் பிரார்த்தித்து அன்றைய தினம் அன்னாரின் இல்லத்தில் நிகழும் அஞ்சலிப் பிரார்த்தனையிலும், மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இல.34,யாழ் வீதி, யாழ்ப்பாணம். (6027) -குடும்பத்தினர்

## இலங்கை மின்சார சபைக்கு

# கிளிநொச்சி மாவட்டத்தில் 8 கோடி ரூபாய் நிலுவை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மின் பாவனையாளர்களால் இலங்கை மின்சார சபை கிளிநொச்சி அலுவலகத்திற்கு 8 கோடி ரூபா நிலுவையாக செலுத்த வேண்டியுள்ளதாக இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சர் குகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மீள் குடியேற்றத்திற்கு பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் அரைவாசி பகுதிக்கு மேல் மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வேகமாக மின்சார விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மின்சார சபையும பாவனையாளர்களுக்கான மின் இணைப்பையும் வேகமாக வழங்கி வருகிறது.

இந்த நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் இன்றுவரை கிளிநொச்சி மாவட்ட மின் பாவனையாளர்களால் மின்சார சபைக்கு 8 கோடி ரூபா மின் கட்டணம் நிலுவையாக செலுத்த வேண்டியுள்ளது எனத்தெரிவித்த மின் அத்தியட்சர் இதுவரை இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி அலுவலகத்தினால் 4 ஆயிரத்து 700 மின் பாவனையாளர்களுக்கு சிவப்பு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்தோடு பரவலாக இரண்டு மாதம் மின்சார கட்டணம் செலுத்தாதவர்களின் மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-6)

# ஐ.நா தீர்மான பாதிப்புக்கள் குறித்து ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் சில அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

அமைச்சர்களான நவீன் திஸாநாயக்க, வாசுதேவ நாணயக்கார, ரெஜினோல்ட் குரே, திஸ்ஸ விதாரண மற்றும் ராஜித சேனாரட்ன ஆகியோர் இவ்வாறு ஜனாதிபதியை சந்திக்க உள்ளனர்.விரைவில் ஜனாதிபதி சந்திக்க உள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சில வேளைகளில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம் எனவும், இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பது குறித்தும் கலந்துரையாடப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தக குற்றச் செயல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அதனை எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கைக்கு வெளியே விசாரணை பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட்டால் அதனை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-6)

கார் விற்பனைக்கு

2004 ஆம் ஆண்டு MODEL அம்பாசிடர் கார் HY - 6XXX டீசல், A/C, Power Stearing விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 0777983933 (6029)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சோதிடம் பலிக்குமா?

"சோதிடம் உண்மையா? பொய்யா?" என ஒருத்தரிடம் கேட்டேன்.

"அதற்கு அவர் எனக்குத் தெரியாது. இது தொடர்பாக எனக்குக் கதை தெரியும்" என்றார்.

"சரி... அதையாவது சொல்லுங்கள் கேட்போம்!" என்று கூறினேன்.

அவர் கதை கூற ஆரம்பித்தார். ஒரு காடு. அங்கே ஒரு குரு. அவரிடம் இரு சீடர்கள் வந்தார்கள்.

"ஐயா... எங்களுக்கு ஜோதிடம் கற்றுக்கொள்ள ஆசை... அது தான் உங்களைத்தேடி வந்தோம்!" என்றார்கள்.

"சரி... கற்றுத் தருகிறேன்" என்றார். ஆறு மாத காலத்தில் அது தொடர்பான எல்லா பாடத்தையும் நடத்தி முடித்தார்.

பின்பு சீடர்களை அழைத்து, "இங்கே நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டியதெல்லாம், பெற்று விட்டீர்கள். இனிமேல் வெளி உலகம் தொடர்பாக தெரிந்து கொள்ள வேண்டியது சிறிதளவு உள்ளது... அதையும் தெரிந்து கொண்டு இங்கே வந்தால், உங்களுக்கு ஆசீர்வாதம் வழங்கி அனுப்பி வைப்பேன்!" என்று உறுதிமொழி வழங்கினார்.

சீடர்கள் இருவரும் காட்டைவிட்டு வெளியேறி நாட்டைச் சுற்றி வலம் வந்தனர். அப்படி வரும் வழியில் சிற்றூர் வழியே நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

"தாகமாக இருக்கிறது... கொஞ்சம் தண்ணீர் குடித்தால் தாகம் தீரும்" என்று ஒரு சீடன் சொன்னான்.

"அதோ பார்...!" என்றார் மற்றவர். அங்கே ஒரு பெண் மண்குடத்தில் கயிற்றைக்கட்டி கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தாள். மெல்ல அவள் அருகில் சென்று, "அம்மா!" என்றான் அவ்வளவுதான்.

தனக்குப் பின்னால் திடீரென ஒரு சத்தம் வருவதை அறிந்த பெண் "திடுக்" என்று திகைத்து நின்றாள்.

அந்த அதிர்ச்சியில் கிணற்றினுள் கயிற்றை விட்டுவிட்டாள். மண்குடம் கயிறு நழுவியதால் மறுபடியும் கீழே விழுந்து துண்டுதுண்டாக உடைந்து தண்ணீருடன் கலந்து போனது. சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடி வந்தார்கள்.

"என்ன நடந்தது?" என்று விசாரித்தார்கள். இவர்கள் நடந்தவற்றை தெளிவுபடுத்தினார்கள்.

"சரி வாருங்கள்!" என இரண்டு பேரையும் ஊர்த்தலைவனிடம் அழைத்துச் சென்றார்கள்.

கிணற்றில் தண்ணீர் எடுத்த பெண் ஊர்த்தலைவரின் மருமகள். சீடர்கள் தாங்கள் வந்த விடயத்தைச் சொன்னார்கள்.

"ஓ... உங்களுக்கு சோதிடம் தெரியுமா?" என்றார் ஊர்த்தலைவர். "ஆம்... தெரியும்" என்று பதிலளித்தார்கள்.

அப்படியென்றால், உங்களுக்கு ஜாதகம் பார்க்கும் வேலை ஒன்று உள்ளது."

"யாருடைய ஜாதகம்?"

"என் மருமகளுடைய ஜாதகம்தான்... அந்தப் பெண்ணின் கணவனை, அதாவது என் மகனை, பத்து ஆண்டுகளாக காணவில்லை. அவன் இருக்கிறானா இல்லையா? இது என்னுடைய முதல் கேள்வி. அப்படி உயிருடன் இருந்தால், அவன் எப்போது திரும்பி வருவான்? இது என்னுடைய இரண்டாவது கேள்வி?"

"இந்த இரண்டு கேள்விகளுக்கும் உங்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கிறேன்!"

"சரி... ஜாதகக் குறிப்பைக் கொடுங்கள்.. பார்த்துச் சொல்லுகிறோம்!"

இரு சீடர்களுக்கும் அறை தனித்தனியே கொடுக்கப்பட்டு, கணித்துக் கூறும்படி அங்கு அனுப்பி வைத்தார்.

இருவரும் தனித்தனியே சோதிடக் குறிப்பை ஆராய்ந்தார்கள். அதன் பின் வெளியே வந்தார்கள். "என்ன... பார்த்தீர்களா? என்ன முடிவு?" என்றார் ஊர்த்தலைவர்.

முதல் சீடன், ஐயா! உங்கள் மகன் வருவதற்கான வாய்ப்பு இல்லை. அவரைத் தேடுவதில் அர்த்தமில்லை என்றான்.

இரண்டாவது சீடன்,ஐயா! அவர் இன்னும் ஒரு வாரத்திற்குள் இங்கே திரும்பி வருவார் என்றார்.

ஊர்த்தலைவன் யோசித்தான். "அது எப்படி? நீங்கள் இரண்டு பேரும் ஒரே குருவிடம்தான் படித்தீர்கள்... ஆனால்... இப்படி இரண்டு விதமாகப் பலன் சொல்கிறீர்கள்....!"

சரி... எப்படி இருந்தாலும் ஒரு வாரத்தில் உங்களில் யார் சொல்வது உண்மை என்பது தெரிந்துவிடும்...அதுவரை நீங்கள் இருவரும் இங்கே தான் தங்க வேண்டுமென்றும் கூறிவிட்டு சீடர்களை அங்கேயே சிறை வைத்தான்.

ஆறு நாட்கள் ஓடி விட்டன. ஏழாவது நாள் பிறந்தது. ஆச்சிரமத்தில் இருந்த குருவுக்கு சந்தேகம். சீடர்கள் எங்கே போனார்கள்? தேடிக் கொண்டு புறப்பட்டார்.

ஒவ்வொரு இடமாக விசாரித்துக்கொண்டு கடைசியாக சீடர்களின் தலைவரின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். குருவைப் பார்த்த தலைவருக்கு வியப்புக் கலந்த மகிழ்ச்சி.

ஏன் தெரியுமா? காணாமற் போன தன் மகன்தான் அந்தக் குரு... என்பது புரிந்தது.

நடந்த நிகழ்வினை கேட்டுவிட்டு... குரு விளக்கினார். "குடம் உடைந்தது அபசகுணம் என்பதாலும், உடைந்த பானை ஒன்று சேராது" என்பதாலும் கணவன் திரும்பிவர வழியில்லை என்றான் முதல் சீடன்.

இரண்டாவது சீடன் இந்த நிகழ்ச்சியில் பஞ்ச பூதங்கள் இணைவதையே கண்டான்.

"குடத்தில் இருந்து மண், மண்ணோடு சேர்ந்தது. தண்ணீர், தண்ணீருடன் சேர்ந்தது. ஆகவே, கணவன் மீண்டும் வந்து சேர்வார் என்று பலன் எழுதினான்."

"அப்படியென்றால் யார் சொன்னது சரி?"

"இரண்டு பேரும் சொன்னதும் சரி தான்!"

"அது எப்படி?"

"இரண்டாவது சீடன் சொன்னபடி, நான் வீட்டுக்கு வந்துவிட்டேன் என்பது உண்மை. அதே சமயத்தில் இப்போது நான் ஒரு சந்நியாசி. குடும்ப உறவில் எனக்கு சம்பந்தமில்லை. ஆகவே கணவன் என்ற உறவுமுறையில் இங்கே வரவில்லை... இந்த வகையில் முதல் சீடன் சொன்னதும் உண்மை!"

இக்கதையைக் கூறி முடித்த நண்பரிடம் கேட்டேன்; "சோதிடத்தை நம்பலாமா?வேண்டாமா?" அவர் வேடிக்கையாகச் சொன்னார்.

"ஜாதகப் பலன் உனக்குச் சாதகமாக இருந்தால் அதை நம்பலாம். உனக்குப் பாதகமாக இருந்தால் அதை நம்பாதே! வாழ்க்கையில் எதையும் சாதகமாக எடுத்துக் கொள். அதுதான் நல்லது!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சீனாவின் ஆதிக்கத்தை தடுக்கவே இந்தியா நடுநிலைமை வகித்தது

## மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்

சீனாவின் ஆதிக்கத்தை தடுக்கவே ஐக்கிய நாடுகள் மனித வுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வில்லை என இந்தியா அறிவித்துள்ளது.

இந்திய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது சீனாவின் தலையீடுகளை வலுவிழக்கச் செய்யும் நோக்கில் இந்தியா நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளித்திருந்தால், அது சீனாவின் இலங்கை மீதான தலையீட்டை மேலும் அதிகரிக்கக் கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர் பகுதிகளில் இந்தியா புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு பணிகளில் தற்போது ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் உட்கட்டுமான வசதிகளை மேற்கொண்டு வரும் சீனா, தமிழர் பிரதேசங்களில் புனர்வாழ்வு பணிகளிலும் தலையீடு செய்ய வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# இலங்கையின் விடயத்தில் சிதம்பரம் இரட்டைவேடம்

இலங்கை விடயத்தில், மத்திய அமைச்சர் சிதம்பரம், இரட்டை வேடம் போடுகிறார், என, ஐ.ஜே.கே., தலைவர், பச்சமுத்து குற்றம் சாட்டினார்.

திருச்சி லோக்சபா தொகுதி, தே.மு.தி.க., வேட்பாளர், விஜய்குமாரை ஆதரித்து, தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில், புதுக்கோட்டையில் நடந்த செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்ற, ஐ.ஜே.கே., தலைவர் பச்சமுத்து, நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கை தமிழர்கள் விடயத்தில், மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம், இரட்டை வேடம் போடுகிறார். "இலங்கைக்கு எதிராக, ஐ.நா., மனிதவுரிமை பேரவைக் கூட்டத்தில், அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை, இந்தியா ஆதரித்திருக்க வேண்டும் என, சிதம்பரம் கருத்து தெரிவித்துள்ளார். ஆனால், அவரது கருத்தை, காங்கிரஸ் கட்சி நிராகரித்துள்ளது.

தமிழகத்திற்கு வந்தால், ஒரு முகத்தையும், டில்லிக்கு சென்றால், வேறொரு முகத்தையும் காட்டுகிறார். சிதம்பரத்தின் இரட்டை வேடத்தை, நன்கு உணர்ந்த தமிழக மக்கள், அவரை முழுமையாக ஒதுக்கிவிட்டனர். இதை உணர்ந்த சிதம்பரம், தேர்தலில் மகன் கார்த்தியை இறக்கியுள்ளார்.

மோடி பிரதமரானால், தொழில் மற்றும் பொருளாதார ரீதியாக இந்தியா வளர்ச்சியடையும் என்றார். (2)

# தந்தை செல்வாவின் சிரார்த்த தினம் இன்று

தமிழரசுக்கட்சியின் தலைவரும் தமிழர்களின் தந்தை என அழைக்கப்படும் எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் 116 ஆவது சிரார்த்ததினம் இன்று திங்கட்கிழமை வவுனியாவில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வில், காலை 6 மணிக்கு இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து 9 மணிக்கு வவுனியா நகர்ப்பகுதியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் சிலைக்கருகில் அக்கட்சியின் வவுனியா மாவட்டத் தலைவர் டேவிட் நாகநாதன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இதனையடுத்து நண்பகல் 12 மணிக்கு வவுனியா குருமன்காடு காளிகோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (2-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 100 | 80 |
| தக்காளி | 40 | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 30 | 20 | 40 | 40 |
| கரட் | 90 | 80 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 80 | 50-60 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 90 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 90 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 50 | 50 |
| பயற்றங்காய் | 80 | 70 | 50 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 50 |
| கறிமிளகாய் | 60 | 50 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 200-300 | 250 | 150 | 200 |
| போஞ்சி | 90 | 120 | 100 | 120 |
| கத்தரிகம்புள்ள | 40 | 80 | 40 | 80 |
| [illegible] | 10 | 30 | 15 | 30 |
| தேசிக்காய் | 60 | 80 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 70 | 100 | 100 | 80 |

# இராசி பலன்

31.03.2014
(பங்குனி 17, திங்கட்கிழமை )
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
பிரதமை நள்ளிரவு 11.59 மணிவரை
ரேவதி பின்னிரவு 1.51 மணிவரை
இராகுகாலம் 7.42-9.12 மணிவரை
சுபநேரம் 12.12-01.42 மணிவரை

**மேடம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள், வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடை பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எதிர்பாராத பயணங்கள் கைகூடலாம்.

**சிங்கம்** குடும்பத்தில் இடையிடையே சில வாக்குவாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்,செலவுகள் அதிகமாகும்,வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் ஏற்படலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**துலாம்** விருந்தினர் வருகையுண்டு, உடல் நலம் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்திதரும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபாரத்தை விருத்தி செய்ய முற்படுவீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**தனுசு** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம், அரசியல் வாதிகளால் அனுகூலமுண்டு, தேவையற்ற சஞ்சலங்கள் உருவாகும்.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், வருமானம் திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், பணப்புழக்கம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மீனம்** மனக்கிலேசங்கள் அதிகரிக்கும், திட்டமிட்ட காரியம் ஒன்றில் திடீர் மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், போசன சுகமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் இலங்கை வங்கி கிளை திறப்பு




நெல்லியடி நகரில் 60 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கியின் கட்டடத்தொகுதி இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த கட்டடத்தொகுதியினை இலங்கை வங்கி யின் பொது முகாமையாளர் டி.எஸ்.குணசேகர திறந்து வைக்கவுள்ளார்.

வடமராட்சியில் முதன்முதலாக பாதுகாப்புப் பெட்டக வசதிகள் இந்த வங்கிக்கிளையில் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# சொப்ட் லொஜிக் காட்சியறை திறப்பு

"சொப்ட்லொஜிக் மைக்ஸ்" நிறுவனத்தின்காட்சியறை கடந்த வெள்ளிகிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள காகில்ஸ்கட்டிடத்தொகுதியில்திறந்து வைக்கப்பட்டது.

சொப்ட்லொஜிக் மைக்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நசீர்.ஏ.மஜிட் தலைமை யில் நடைப்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் ஏனைய பகுதி களில் உள்ள சொப்ட்லொஜிக் மைக்ஸ நிறுவனங்களின்கிளை முகாமை யாளர்கள மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# ஊழியர்களை கௌரவித்தது சிங்க சிமெந்து




ஊழியர்களைக் கௌரவித்த சிங்க சீமெந்து இத்தாலியைத் தளமாகக் கொண்டது. உலகின் ஐந்து முன்னணி சீமெந்து உற்பத்தியாளர்களுள் ஒன்றான இடெல் சீமெந்து குழுமத்தில் அங்கத்துவம் பெற்றதும், பிரபல சிங்க சீமெந்து வர்த்தக நாமத்தின் விற்பனையாளர்களுமான சிங்க சீமெந்து (பிறைவேட்) லிமிடெட், தனது கம்பனிக்காக பத்து வருடங்களுக்கும் மேலாக உழைத்த ஊழியர்களை அண்மையில் கௌரவித்தது.

உலகின் பாரிய பத்துக் கைத்தொழிற்றுறைகளுள் ஒன்றாக விளங்கும் இடெல் சீமெந்து 22 நாடுகளில் செயற்படுவதோடு, 53 நாடுகளில் சீமெந்து ஆலைகளைக் கொண்டிருக்கிறது.

## பங்குச் சந்தைக்கு ISO

கொழும்பு பங்குச்சந்தைக்கு ISO தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கொழும்பு பங்குச் சந்தையின் செயற்பாடுகள் பாதுகாப்பானவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளன.

இந்த தரச்சான்றை பெற்றுக் கொண்டுள்ளதன் மூலம் தமது பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் விபரங்கள் மற்றும் தரவுகள் அனைத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பங்குச்சந்தை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தகவல் பாதுகாப்புக்கான ISO 27001, தொடர்ச்சியான வர்த்தகச் செயற்பாட்டுக்கான ISO 22301மற்றும்வியாபாரம், பதிவு மற்றும் வைப்பு சேவைகள், தகவல் தொழிலநுட்ப முகாமைத்துவம்ISO 20000 ஆகியவற்றுக்கான தரச்சான்றுகளை கொழும்பு பங்குச்சந்தை பெற்றுள்ளது.

## 20% வருமான அதிகரிப்பை பதிவு செய்த ஜனசக்தி

நிறைவடைந்த நிதியாண்டில் ஜனசக்தி இன்சூரன்ஸ் அதியுயர் வருமானமாக 9.9 பில்லியன் ரூபாவை பதிவு செய்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 வத அதிகரிப்பாகும். இந்த உறுதியான பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து, ஜனசக்தி இன்சூரன்ஸ் தமது பங்குதாரர் களுக்கு 22 வீதம் பங்கிலாபத்தையும், 12.48 ரூபா பெறுமதியான நிகர சொத்து பெறுமதியையும் வழங்க முன்வந்துள்ளது.

இது 34 வீத வருடாந்த அதிகரிப்பாகும். இந்த உயர் வளர்ச்சி பெறுமதிகளுடன், அதியுயர் வரிக்குப் பிந்திய இலாப பெறுமதியாக ஒரு பில்லியன் ரூபாவையும் ஜனசக்தி பதிவு செய்திருப்பதன் மூலம் தனது 700,000 வாடிக்கையாளர்களின் உறுதியான இலக்கை எய்தியுள்ளதாக ஜனசக்தி நிறுவனத்தின் பணிப்பாளர பிரகாஷ் ஷாஃப்டர் தெரிவித்தார்.

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,937.87 | 5,972.17 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,246.02 | 3,278.67 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 6,290.380 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** ஏஎம்எப் கோ லிமிட்(374.90), செண்டிப் லாண்ட் (999.00), செமனெக்ஸ்(81.90), மகாவலி றீச்(16.60), செரண்டிப் இன்ஜி(99.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** ஜிஎஸ் பினான்ஸ்(49.80), எஸ்.எம்.பி.லீசிங்( 0.40), ஆசிரி (11.80), ஒபிஸ் ஈகுப்மன்ட்(1700.00), அஸ்கொட் ஹோல்டிங்(114.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## ஜனவரி மாத ஏ/தி அதிகரிப்பு –ம.வங்கி

ஜனவரிமாதத்தில்நாட்டின்மொத்த ஏற்றுமதி இரட்டை இலக்க பெறும தியில் அதிகரித்திருந்ததாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் இறக்குமதி குறைவடைந்திருந்ததன் காரணமாக, வியாபார வித்தியாசம் பெருமளவில வீழ்ச்சியடைந்திருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தது. 2013-ம் ஆண்டு ஜனவரி மாதத்துடன்ஒப்பிடுகையில்நாட்டின் ஜனவரி மாதத்தில் மொத்த ஏற்றுமதி 23.2 வீதத்தால் அதிகரித்து 898 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

இதே காலப்பகுதியில் இறக்குமதி பெறுமதி 7.9 வீத அதிகரிப்பை மட்டுமே பதிவு செய்து 1654 மில்லியன் டொலர்களாக பதிவாகியிருந்தது.

# 175 வருட நிறைவை கொண்டாடும் இலங்கை வர்த்தக சம்மேளனம்




இலங்கை வர்த்தக சம்மேளனம் (Ceylon Chamber of Commerce) தனது 175 வருட நிறைவை கொணடாடுகிறது. பெருந்தோட்ட சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 1839ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி ஒரு வர்த்தக நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த தாபனம், தற்போது நாட்டின் வர்த்தக துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இலங்கையின் வர்த்தக துறையில் தனியார் துறையின் ஆதிக்கத்தை மேம்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளை இலங்கை வர்த்தக சம்மேளனம்முன்னெடுத்து வருகிறது.

இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனம்கப்பல்சரக்கு கையாள்கை சம்மேளனம் போன்ற பல அமைப்புகளை வர்த்தக சம்மேளனம் தாபித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# Naturals இன் புதிய வி/ணை தூதுவராக கரீனா கபூர் நியமனம்




2014 ஆம் ஆண்டிறுதியில் ஆசியா முழுவ திலும் 650 அழகுக்கலை நிலையங்கள் அனைத்து கமராக்களும் Naturals இன் புதிய உலகளாவிய விற்பனைத் தூதுவரின் (கரீனா கபூர் ) வருகைக்காக காத்திருக்கின்றன. இந்திய அழகின் சின்னமான கரீனா எமது திட்டம் மற்றும் சிறப்புத்தன்மைக்கு எவ்வித மாற்றமுமின்றி பிரதிபலிக்கின்றர்.

கரீனா தமது பாணியை மற்றும் தன்னம்பிக்கை வெளிப்படுத்தியே ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடை யிலும் தலைமுறைகள் கடந்தும் வசீகரிப்பது, அவளின் கவர்ச்சி மற்றும் திறமையினாலேயாகும். விருதுகள் வென்றுள்ள இந்தியாவின் Naturals அழகுக்கலை நிலைய வலையமைப்புடன் பாலிவுட் தேவதை கரீனா, இலங்கைக்கு வருகைத் தருவது அழகுக்கலை துறையில் புதிய புரட்சிகரமான மாற்றத்தை எற்படுத்துவதற்காகவேயாகும்.

தமது வரலாற்றில் மற்றொரு மைல்கல்லை கடக்க தொடாங்கும் இச் சந்தர்ப்பத்தில் Naturals இன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் இணை நிறுவனரான சி.கே. குமாரவேல் , 2014 ஆம் ஆண்டிறுதியில் Naturals அழகுக்கலை நிலையங்களின் எண்ணிக்கையை இரு மடங்காக்கி 650 நிலையங்களாக்குவதும், இந்தியாவின் புதிய பிரதேசங்களில் நுழைந்து விரிவான விரைவாக்க திட்டங்களை மேற்கொள்வதோடு இலங்கை போன்ற வளர்ந்துவரும் வெளி நாட்டு சந்தைகளிலும் தமது வியாபார நடவடிக்கை விரிவாக்குவதே தமது திட்டமாகும் என சி.கே.குமாரவேல் தெளிவுபடுத்தினார்.

# 20 புதிய இடங்களில் கொமர்ஷல் கிரெடிட்

கொமர்ஷல் கிரெடிட் நிறுவனமானது சாதனையை முறியடிக்கும் விதத்தில நாடு முழுவதிலும் உள்ள 20 புதிய இடங்களில் கிளைகளை விஸ்தரித்ததன் ஊடாக, நிதித் துறையில் மிகவும் குறிப்பிடத்தக்க வெற்றகரமான நிறுவனமாகவும், இலங்கையில் மிக விரைவாக வளர்ச்சியடைந்து செல்லும் நிதிக் கம்பனியாகவும் தனது நன்மதிப்பை மேம்படுத்திக் கொண்டுள்ளது.

கடந்த 20-ம் திகதி வியாழக்கிழமை நாடு பூராகவும் ஒரே நேரத்தில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வுகளில் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின்அதிக எண்ணிக்கை யிலான வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்துகொண்டிருந்தனா.

## இந்திய கம்பனிகள் மூலம் 81 ஆயிரம் பேருக்கு வேலை

அமெரிக்காவில் முதலீடு செய்து தொழில் தொடங்கியுள்ள இந்திய கம்பனிகள் கடந்த 2013-ம் ஆண்டில் 81 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்துள்ளது. அமெரிக்காவிலுள்ள கபிட்டல் ஹில பகுதியில் இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் இந்திய மற்றும் அமெரிக்க தொழில் அதிபர்கள் பங்கேற்றனர். இதில்சிஐஐ தனது ஆண்டறிக்கையை வெளியிட்டது.அதில், 'அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா, நியூயார்க், டெக்சாஸ் உள்ளிட்ட 40 மாகாணங்களில் 68 இந்திய கம்பனிகள் உள்ளது. இந்த கம்பெனிகள் கடந்த 2013-ம் ஆண்டில் 17 பில்லியன் அமெரிக்க டொலர் அளவிற்கு முதலீடு செய்துள்ளது. இதன் மூலம் 81 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி கொடுத்துள்ளது' என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் அந்நிய நேரடி முதலீடு செ[illegible]ம் 10 நாடுகளில் இந்தியாவும் ஒன்[illegible]க இருக்கிறது என்று அமெரிக்க வர்த்தக துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிறுவனங்களின் பொதுக்கூட்டங்கள்

இந்த வாரம் சுமார் 25 வெவ்வேறு நிறுவனங்களின் வருடாந்த பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன. சில நிறுவனங்கள் குறித்த ஒன்று கூடல்களில் பங்குபற்றும் பணிப்பாளர்களின் நேரம் ஏனைய கூட்டங்களுடன் தொடர்பு படாமல் இருப்பதற்காக சில மாதங்களுக்கு முன்னதாகவே தமது பொதுக்கூட்டம் இடம்பெறும் திகதிகளை அறிவித்திருந்தன.

2011-ம் ஆண்டில் ஒரே வார காலத்தினுள் சுமார் 80 வருடாந்த பொதுக்கூட்ட ஒன்றுகூடல்கள் இடம்பெற்றிருந்தமை சாதனையாக திகழ்கிறது.

## 8 இலட்சம் கார்களை திரும்ப பெறுகிறது ஜிஎம்




அமெரிக்காவின் முன்னணி ஆட்டோ தயாரிப்பு நிறுவனமான ஜெனரல் மோட்டார்ஸ் (ஜிஎம்) தயாரித்த பல்வேறு வாகனங்களில் இக்னிஷன் சுவிட்ச் பழுதானதாக புகார்கள் வந்தது. இதனால பல்வேறு விபத்துகளும் ஏற்பட்டதாக புகார் வந்தது. இவ்வாறு பழுதடைந்த பல இலட்சம் வாகனங்களை ஜெனரல் மோட்டார்ஸ் திரும்பப் பெற்றுள்ளது. சில வாரங் களுக்கு முன்பு 15 லட்சம் வாகனங்களை திரும்ப பெற்றது. இந்நிலையில்நேற்று 8.24 லட்சம் கார்களை திரும்ப பெறுவதாக அறிவித்துள்ளது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.23 | 132.11 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 214.06 | 220.17 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 176.61 | 182.39 |
| சுவிஸ் பிராங் | 144.75 | 150.05 |
| கனேடிய டொலர் | 116.70 | 120.64 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.15 | 123.63 |
| சிங்கப்பூர் டொலர் | 101.94 | 105.28 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.58 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார அபி.திட்டமதிப்பீட்டை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை

, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் இவ்வாண்டு நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய கலாசார அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இத் திட்டங்கள் தொடர்பான திட்ட மதிப் பீட்டை கலாசார உத்தியோகத்தர், கணக்கா ளர், பிரதேச செயலாளர் ஆகியோரின் உறு திப்படுத்தலுடன் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இக் கலாசார அபிவிருத்தித் திட்டங்கள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள பிரதேச செயலாளர்கள், கலாசார உத்தியோக த்தர்கள் ஆகியோரின் கண்காணிப்பில் நடை முறைப்படுத்தப்படும். இதற்கமைய கலைம ன்றங்களின் அபிவிருத்தி, பாரம்பரிய கலை ப்பயிற்சி வழங்கல், பிரதேசம் சார்ந்த நூல், மலர் வெளியீடு, பிரதேச கலாசார விழா என்ப வற்றுக்காக தலா 75 ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கலாசார விழிப்புணர்வுக்கு 50 ஆயிரம் ரூபாவும் பிரதேசம் சார்ந்த வெளியீடுகளை ஆவணப்படுத்துவ தற்காக ஒரு இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு பிரதேச செய லகத்திற்கு 4 இலட் சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளதாகவும் தெரி வித்துள்ளார். (2)


## காணியுடன் வீடு விற்பனை

2 பரப்புக் காணியில் மூன்று அறை, குசினி, விறாந்தை, றொயிலட், கிணறு போன்றவற்றுடன் 12 தென்னை மரங்க ளும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

(6026)

**தொடர்புகளுக்கு:**
**கலையரசு வீதி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்,**
**தொ.பே.இ. 0774174251**



## முக்கிய அறிவித்தல்

இந்து பௌத்த கலாசார பேரவையும் EUROPA BUILDUNGS FORUM உம் இணைந்து நடத்தும் நாட்டியமயில் 2014 போட்டி நிகழ்ச்சி பலரது வேண்டுகோளுக்கிணங்க நிகழ்விற்கான விண் ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 15.04.2014 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**தேசமானிய M.T.S. இராமச்சந்திரன்,**
**தலைவர், விழா ஒழுங்கமைப்புக்குழு.**



## சுதந்திரமாக கற்போம்

### வடமாகாணத்திற்கான தேசிய இரண்டாம்மொழி இலவச கற்கைநெறி

மாணவர்கள், பொதுமக்கள், அரசாங்க மற்றும் தனியார்துறை உத்தியோகத்தர்கள் கற்கைநெறியில் இணைந்து கொள்ளலாம். வடமாகாணத்தில் அரசாங்க பாடசாலைகளில் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் , இல. 29, பழம் வீதி, கந்தர்மடம் , யாழ்ப்பா ணம் தலைமைக்காரியாலயத்தில் வாரத்தின் ஏழு நாட்களிலும் வகுப்புக்கள் நடைபெறும்.

மொழியியல் அமைச்சின் அங்கீகாரம் பெற்ற சிங்களமொழி அத்தாட்சிப்பத்திரம் தரம் III சான்றிதழ் வழங்கப்படும்.

தற்போது தலைமைக்காரியாலயம், நெல்லியடி மத்திய கல்லூரி, கோப்பாய் கிறிஸ் தவக்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி, வரணி மகா வித்தியாலயம், மல்லாகம் மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்டோறியாக்கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் ஆகிய இடங்களில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. காரைநகர், நீர்வேலி, புத்தூர், கைதடி ஆகிய இடங்களிலும் புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

புதிய வகுப்புக்கள் சகல இடங்களிலும் 03.05.2014 சனிக்கிழமை ஆரம்பிக்கப் படவுள்ளதால் மாணவர்கள் மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் அல்லது காரியாலயத்தில் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**இந்து பௌத்த கலாசார பேரவை,**
**இல 29, பழம்வீதி,**
**கடந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல. 021 222 0021** (6024) **நிர்வாகம்.**



## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)



தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர் எஸ். எஸ். சர்மா (குருஜி) சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி. T.P.0777064247

(6023)



## தவத்திரு வே. முருகேசு சுவாமி அவர்களின் 17 ஆம் ஆண்டு குருபூசை



காலம்:- 07.04.2014
திங்கட்கிழமை
நேரம்:- முற்பகல் 10.30 மணி
இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்
விசேட நிகழ்வு:- இசைச்சொற்பொழிவு:- முருகேசு சுவாமிகளின் கந்தக் கதம்பம் பக்க வாத்திய சகிதம்
வழங்குபவர்:- கவிமணி க.ஆனந்தராசா (அன்னைதாசன்)

ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளோடு ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் அறுபத்து மூவர் குருபூசையுடன் நிறைவு பெறும்.

குறிப்பு:- 01.04.2014 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்தமாக இடம்பெறும் வருடாந்த சங்காபிஷேகமும் சண்முகார்ச்சனையும் இடம்பெறும்.

செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு.

சுவாமி அவர்களின்
அடியவர்கள் சார்பில்
ஆ.அருணாசலம்

(6011)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 94 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / வியாபார முகாமையாளர்<br>தொ.இ: B/1156 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 15 செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1717 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 43.75<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L / களஞ்சிய உதவியாளர்<br>தொ.இ: B/1157 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 26 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: G/1723 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 35 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L / பேருந்து நடத்துநர்<br>தொ.இ: B/1158 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 84 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ் - Not PR)<br>எதிர்பார்ப்பு : PR உள்ளவர்<br>தொ.இ: G/1726 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 12 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி / ஆசிரியர்<br>தொ.இ: B/1159 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 25 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: O/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: G/1728 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பணி அபிவிருத்திச் சங்க மேம்பாட்டிற்கு நிதியுதவி

### அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்

(மானிப்பாய்)

வடமாகாண கைப்பணி அபிவிருத்திச் சங்கத்தின் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இரண்டு இல




ட்சம் ரூபா காசோலையை நேற்று முன்தினம் யாழ். அமைச்சரின் அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளார்.

வட மாகாணத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிற் துறைகளை மேம் படுத்தும் வகையில் அமைச்சரின் வழிகாட் டலுக்கு அமைவாக வடமாகாண கைப்பணி அபிவிருத்திச்சபை செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், குறித்த சபையின் திட்டங் களை எதிர்காலத்தில் மேம்படுத்தி வளர்த்தெடுக்கும் நோக்கில் அமைச்சர் இரண்டு இலட்சம் ரூபா காசோலையினை சங்கத் தலைவரிடம் வழங்கினார்.

இதன் போது தேசிய அருங்கலைகள் பேரவையின் மாவட்டப் பணிப்பாளர் நவ தர்சன் உடனிருந்தார். (2-23)

நன்றி: ஐலண்ட்




# வடமராட்சி கிழக்கின் உள்ளக வீதிகளை புனரமையுங்கள்

### பருத்தித்துறை பிரதேச சபையிடம் மக்கள் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு கிராமங்களின் உள்ளக வீதிகள் விரைவாக புனர்மைக்க வேண்டுமென கிராம மக்கள் பருத்தித்துறை பிரதேச சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கின் அனைத்து கிராமங்களிலும் மக்கள் குடியிருக்கும் இடங்களின் உள்ள கற்பாதைகள் மணல் நிறைந்த பகுதியாகவே காணப்படுகின்றன.

இந்த கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு தற்போது நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிரந்தர வீடுகளை அமைப்பதற்குரிய கட்டட மூலப்பொருட்களை இவ் மணற் பாதை ஊடாக சிரமத்தின் மத்தியில் பணத்தினை செலவு செய்து இம்மக்கள் கொண்டு செல்கின்றனர்.

இவ்வாறானநிலைமையைகருத்திற் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் மருதங்கேணி பிரதேச சபை அலுவலக பொறுப்பதிகாரி ஆகியோர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு உடுத்துறை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கிராமங்களில் ,களி மணலினால் சுமார் 3 கிலோ மீற்றர் தூரமான உள்ளக வீதியை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

எனினும் இந்த கிராமங்களுக்கு தற்போது சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவரமைப்பு இந்திய வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்த வீட்டுத்திட்டம் இன்னும் ஒரு மாத காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால், இந்த கிராமங்களில் உள்ள மணலான பாதைகள் புனரமைக்கப்ப டவேண்டும்.

எனவே இந்த மக்களின் நிரந்தர வீட்டுத்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கும் அவர்களுக்கு நிறுவனங்களால் வழங் கப்படும் வீட்டுத்திட்டங்களுக்கான நிதி வீண் விரயமாக்குவதை தடுப்பதற்கும் கிராமமட்ட குழு அமைப்புக்களும் பிரதேச சபையினரும் இந்த கிராமங்களில் உள்ளக வீதிகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் பருத்தித்துறை பிரதேச சபையிடம்கோரிக்கைவிடுத்துள்ளனர். (2-64)

# ஒன்றுகூடல்

(கொடிகாமம்)

கரம்பைக்குறிச்சி ஜே/342 கிராம அலுவலர் பிரிவில் சமூக மட்ட அமைப்புக்களுக்கான ஒன்று கூடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கிராம அலுவலர் திருமதி.தீ.மயூரன் தலைமையில் கரம்பைக் குறிச்சி மேற்கு பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரமுகர்களாக சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், பிரதி திட்டப்பணிப்பாளர்இ.ரகுநாதன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.ரவிகரன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ச.தயாளினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக கரம்பைக்குறிச்சி மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (2-272)

# மாணவனின் நிதியுதவியில் சரஸ்வதி வழிபாட்டு பீடம் அமைப்பு

(மல்லாகம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழமை வாய்ந்த மண்டபமான வாகீசர் மண்டபத்தில் வீற்றிருக்கின்ற சரஸ்வதி வழிபாட்டு பீடத்தினை புதுப்பொலிவுடனும் நவீனத்துவ ரீதியிலும் ஐம்பதாயிரம் ரூபா செலவில் வர்த்தகத் துறையில் கல்வி பயிலும் தி.வாசுதேவன் வடிவமைத்து கொடுத்துள்ளார்.

மேற்படி புனரமைப்பிற்கான திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் வாகீசர் மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர் சி.ரமேஸ், உப அதிபர் பெ.வசந்தன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்க தலைவர் கணேசமூர்த்தி, உப தலைவர் விவேகானந்தராஜா மற்றும் கல்லூரி பகுதித் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-21)

# தேங்காய் திருடர்கள் இருவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

கரணவாய் சீனட்டி கிராமத்தில் ஆட்கள் இல்லாத வீடொன்றில் 23 தேங்காய்களை திருடியுள்ள கரவெட்டியைச் சேர்ந்த இரு இளைஞர்களை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

வெளிநாட்டில் வசிக்கும் ஒருவரின் வீடொன்றிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளரின் உறவினர் கொடுத்த முறைப்பாட்டை வைத்தே பொலிஸார் இவர்களை கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவருகின்றது. (2-60)

# மஹோற்சவம்

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திரு விழாவும் மறு நாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 11 மணிக்கு தீர்த்த திருவிழாவும் இடம் பெறுமென ஆலயு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (2-21)

# நோயாளர் நலன்புரி சங்கம் அங்குரார்ப்பணம்

சுன்னாகம் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவின் நோயாளர் நலன்புரிச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நலன்புரிச் சங்கத்தின் வைத்திய கலாநிதி பா. பாலசுப்பிரமணியம், உப தலைவராக ஐ.இராமசாமி, செயலாளராக வி.ஜெயராசா, உப செயலாளராக செ. ஆனந்தகுமாரதாஸ், பொருளாளராக பொ.கமலநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக இ.எயூஜின் மசனட், சு.ஸ்ரீகுமரன், ஞா.செல்வக்குமார், இ.மங்கையற்கரசி, செ.கதிர்காமநாதன், சி.சௌந்தரராஜன், சு.துரைசிங்கம், மா.இராமலிங்கம், திருமதி சி.யோகாம்பிகை, சிறில் சுகந்திரன், சி.சுரேஸ்குமார் ஆகியோர் தெரிவாகினர். (2-21)






மும்மொழி கற்கை நெறிக்கு கற்பிக்க இருக்கும் வளவாளர்களுடனான கலந்துரையாடலொன்று கல்வியங்காடு டச்சு வீதியில் அமைந்துள்ள மும்மொழி கற்கை நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் வளவாளர்களுடன் கலந்துரையாடுவதை படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடம் நேற்று திறப்பு














வரலாற்று சிறப்பு மிக்க, ஈழத்திலுள்ள பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரர்.ஆலயத்திற்கு அருகாமையில் 300 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடம் மற்றும் கீரிமலை சிவபூமி அரங்கம், சிவபூமி கலைக்களஞ்சியம உள்ளிட்ட இரண்டு மாடிக் கட்டடம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப் பட்டது.

சிவபூமி அறக்கட்டளை நிதியத்தின் தலைவர், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நத்திக் கொடியினை ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடத்தை அகில இலங்கை இந்து மாமன்ற அறங்காவலர் சபைத்தலைவர் இறை சிரோரத்தினம் மனித நேய மாமணி வி. கயிலாசபிள்ளை மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் இணைந்து நாடா வெட்டி திறந்து வைத்தனர்.

இதேவேளை ஆன்மீகச்சுடர் ஹவாய் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள கீரிமலை சிவபூமி அரங்கத்தின் நினைவுக்கல்லை



திரைநீக்கம் செய்ததோடு அரங்கத்தையும் நாடாவெட்டி திறந்து வைத்தார்.

அதேவேளை இந்த நிகழ்வில் கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தான குருமுதல்வர், மாவிட்டபுரம் தேவஸ்தான குருமுதல்வர் மற்றும் பல சிவாச்சாரியர்கள் யாழ். இந்தியத் துணைத்துாதுவர் வி. மகாலிங்கம், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரதிநிதிகள், பல்கழைக்கழக பேராசிரியர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நல்லை ஆதீன குருமுதல்வர் உரையாற்றும் போது,

"எங்களுடைய மண்ணில் அனைவரும் நிம்மதியாக வாழ வேண்டும். இந்த பிரதேசம் மீண்டும் புனித பிரதேசமாக வரவேண்டும் என்பதே அனைவரின் விருப்ப மும் கூட. கீரிமலை , மாவிட்ட புரம் என்பன புனித பூமியாக போற்றப்பட்டது.

சிவபூமி அறக் கட்டளை நிதியத்தின் உதவியுடன் பல சமய சமூகப்பணிகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றது.

இதே போன்று இன்னும் பல அறக்கட்டளை நிதியங்கள் இங்கு உருவாக்கப்படவேண்டும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமை பணியகம் கொழும்பிலிருந்தாலும் நாடு பூராகவும் இதன்பணி இடம் பெற்று வருகின்றது. தமிழர்களினதும் இந்துக்களின் வரலாற்று ஆவணங்களை பாதுகாக்க வேண்டியுள்ளது.

அத்தோடு நாட்டில் அறம் ஓங்க வேண்டும். நீதி நிலைக்க வேண்டும்" என்றார்.

ஆறுதிருமுருகன் உரையாற்றும் போது,

இங்கு வரலாற்று நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வு இங்கு இடம் பெறுவதற்காக பலர் பாடுபட்டுள்ளனர்.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயப் பகுதி அடர்ந்த காடுகளால் சூழப்பட்டிருந்த காலப்பகுதியில் இங்கு வருவதற்கு 11 பேருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது அதில் நானும் ஒருவனாக வருகை தந்திருந்தேன்.

என்னுடன் வருகை தந்தவர்களில் பலர் கண்ணீர்விட்டு அழுதனர்.அந்த நிலையில் தான் நகுலேஸ்வரர் ஆலயச்சூழல் அப்போது இருந்தது. எங்கு பார்த்தாலும் அபாய எச்சரிகை பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஏக்கத்தோடு திரும்பி போனோம்.ஆனால் தற்போது இங்கு மடங்கள் அமைக்கப்பட்டு அன்னதானம் வழங்கும் நிலைக்கு வளர்ந்துள்ளோம்.

எனவே மனிதனின் எண்ணத்தில் தளராத துணிவுவேண்டும் அவ்வாறு துணிவு வருமாகவிருந்தால் எத்தனையோ காரியங்களை செய்யமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

763



## உப்பைப் போன்ற பாசம்!

ஒரு கர்வம் பிடித்த ராஜாவிற்கு ஏழு பெண் பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் திருமணப்பருவத்தை எட்டியவுடன்மணமகன களைத் தேடுவதற்குமுன், தன் பெண்கள் தன்னை எந்த அளவிற்கு நேசிக்கின்றனர் என்று சோதிக்க ஆசைப்பட்டார். உடனே அவர கள் அனைவரையும் தன் முன் அழைத்த ராஜா, "என் அருமைப் பிள்ளைகளே! நீங்கள் என் மீது எத்தனை பாசம் வைத்திருக்கிறீர் கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகி றேன்" என்றார்.

உடனே முதல் ஆறு பெண் பள்ளைகளும் தங்களுடைய பாசத் தைப் பற்றி வானளாவ உயர்த்திக் கூறினர். ஒருத்தி "அப்பா! உங்க ளைத் தேனைப் போல் நேசிக்கி றேன்" என்று சொல்ல, ஒருத்தி "உங் களைக் கரும்பைப்போல் நேசிக்கி றேன்" என்று சொல்ல, மற்றொரு த்தி, "உங்களைப் பாயாசம் போல் நேசிக்கிறேன்" என்று சொல்ல, ஒரே புகழ் மாலைகளாகக் குவிந் தன. ஆனால் கடைக்குட்டி மட்டும், "அப்பா, உங்களை உப்பைப் போல் நேசிக்கிறேன்!" என்றாள்.

அவளுடைய பதிலைக் கேட்டு ராஜா திடுக்கிட்டுப் போனார். "என்ன? என் மேல் உனக்குப் பிரியம் அவ்வளவுதானா? நான் உப்பைப் போல் கரிக்கிறேனா? இதுதானா உன் பாசமா?" என்று கோபத்துடன் கேட்க, அவள், "அப்பா! நான் உண்மையைத்தான் கூறுகிறேன். உங்கள் மீது எனக்குள்ள அன்பு அளவிட முடியாதது" என்றாள்.

ஆனால் அவள் மீது ராஜாவிற்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. அவளைப் பழி வாங்க முடிவு செய்த ராஜா, தனது முதல் ஆறு பெண்பிள்ளைகளுக்கு நல்ல இளவரசர் களாகத் தேர்வு செய்த பிறகு, கடைசிப் பெண் ணுக்கு ஓர் ஏழை விறகு வெட்டியுடன் திரு மணத்திற்கு ஏற்பாடு செய்தார். தன் தந்தை யின் முடிவைக்கண்டு அதிர்ந்துபோன கடை சிப் பெண் குமுறிக் குமுறி அழுதாள். என்றா வது ஒருநாள் அவருக்கு உண்மை தெரியும்



என்று நம்பிய அவள் மௌனமாகத் திருமணத் திற்கு உடன்பட்டாள்.

திருமணத்திற்குப் பின் கணவனுடன் காட் டில் குடிசை அமைத்து வாழத் தொடங்கினாள். திருமணம் முடிந்த மறு நாளே விறகுவெட்டி தன் தொழிலைத் தொடங்க கிளம்பியபோது, இள வரசி "வேலை முடிந்து திரும்புகையில், ஒவ்வொரு நாளும் எனக்கு ஏதாவது பரிசு கொண்டு வாருங் கள். அதன்மூலம் நமக்கு நல்ல காலம் பிறக்கும்" என்றாள்.

இளவரசியே தன்னை மணந்தது குறித்து பெரு மிதத்திலிருந்த விறகு வெட்டி, அவளுக்காக எது வும் செய்யத் தயாராக இரு ந்தான். ஆனால் வேலை மும்முரத்தில் பரிசைப் பற்றி மறந்து போக, இரு ட்டி வீடு திரும்பும் போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. பரிசாக எடுத்துச் செல்லு மளவிற்கு அவனுக்கு எதுவும் தென்படவி ல்லை. கடைசியில் ஏதோ நீளமான ஒன்று காலில் தட்டுப்பட, அது கயிறாக இருக்கும் என்று நினைத்து அதையே வீட்டிற்குக் கொண்டு சென்றான். அவன் குடிசையை அடைந்தபின் அந்த கயிறை இளவரசியிடம் தந்தான். அதைக் கண்டதும் அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"ஐயோ! இது செத்த பாம்பு!" என்று கத்தி னாள். "ஐயோ! போயும் போயும் இதையா என் மனைவிக்குப் பரிசாகக் கொண்டு வந் தேன்!" என்று விறகு வெட்டி வருந்த, இள வரசி, "கவலைப்படாதே! அதைத்தூக்கி இப் போதைக்கு கூரைமேல் வீசியெறி! நாளை காலை அதை என்ன செய்வதென்று யோசி க்கலாம்!" என்றாள்.

அதே தினத்தன்று, அரண்மனையில் பட்டத்து ராணி மிகவும் சோகமாக இருந் தாள். தனது கடைசிப்பெண்ணின் தலை விதியை நினைத்து நினைத்து அரண் மனை நந்தவனத்தில் உலாவிக் கொண்டே மருகிக் கொண்டிருந்தவள், தன் கழுத்திலிரு ந்து வைர அட்டிகை அவிழ்ந்து விழுந்ததைப் பார்க்கவில்லை. விண்ணில் பறந்து கொண்டி ருந்த கழுகு ஒன்று, அட்டிகையைத்தன் அலகில் கவ்விக் கொண்டு பறந்துவிட்டது. உயரே பறந்து கொண்டு இருந்த கழுகின கண்களில் விறகு வெட்டியின் குடிசையின் கூரை மீதிருந்த செத்த பாம்பு தென்பட, உடனே வைர அட்டி கையைக் கூரையில் போட்டுவிட்டு, பாம்பை எடுத்துச் சென்றது.... (தொடரும்)



## 03.2014 31 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1492 - ஸ்பெயினிலிருந்து அனைத்து 150 ஆயிரம் யூதர களும் ரோமன் கத்தோலிக்கராக மாற வேண் டும் அல்லது அனைவரும் வெளியேற்றப்படு வார்கள் என்ற உத்தரவை இசபெல்லா மகா ராணி பிறப்பித்தார்.
- 1866 - சிலியின் வல்பரைசோ துறைமுகம் ஸ்பானிய கடற்படையின் குண்டுத் தாக்குதலுக்குள்ளானது.
- 1885 - இலங்கையில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய வருடப் பிறப்பு நாட்கள் விடுமுறைகளாக அறிவிக் கப்பட்டது.
- 1889 - ஈ·பெல் கோபுரம் தொடக்க விழா கொண்டாடப் பட்டது.
- 1909 - பொசுனியா எர்செகோவினா மீதான ஆஸ்திரி யாவின் கட்டுப்பாட்டை சேர்பியா ஏற்றுக் கொண்டது.
- 1917 - ஐக்கிய அமெரிக்கா டானிஷ் மேற்கிந்தியத் தவுகளை டென்மார்க்கிடம் இருந்து 25 மில்லி யன் அமெரிக்க டொலர்களுக்குக் கொள்வனவு செய்து அமெரிக்க கன்னித் தீவுகள் எனப் பெயர் மாற்றியது.
- 1918 - ஐக்கிய அமெரிக்காவில் பகலொளி சேமிப்பு நேரம் முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் கிறிஸ துமஸ் தீவை பிரித்தானியாவிடம் இருந்து கைப்பற்றியது.
- 1951 - யூனிவாக் 1 என்ற முதலாவது ஐக்கிய அமெரிக் காவின் வர்த்தகக் கணினி அந்நாட்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிறுவனத்துக்கு தரப் பட்டது.
- 1959 - திபெத்தின் 14 ஆவது தலாய்லாமா, டென்சின் கியாட்சோ, எல்லையைக் கடந்து இந்தியாவி னுள் நுழைந்து அரசியல் தஞ்சம் கோரினார்.
- 1966 - சோவியத்தின் லூனா 10 விண்கலம் சந்தி ரனை நோக்கி ஏவப்பட்டது. இதுவே சந்திரனின் சுற்றுவட்டத்தை வலம் வந்த முதலாவது விண் கலமாகும்.
- 1970 - 12 ஆண்டுகள் விண்வெளியில் இருந்து விட்டு எக்ஸ்புளோரர் 1 புவியின் வளிமண்டலத்துள் வந்தது.
- 1979 - கடைசி பிரித்தானியப் படையினர் மோல்ட் டாவை விட்டு விலகினர். மோல்ட்டா விடு தலையை அறிவித்தது.
- 1990 - இந்திய அமைதிப் படை ஈழத்தில் இருந்து முற்றாக விலக்கப்பட்டது.
- 2004 - கூகிள் 1 ஜிகா பைட் கொள்ளளவுள்ளதான ஜிமெயிலை அறிவித்தது.
- 2007 - முதலாவது புவி மணி நிகழ்வு சிட்னியில் இடம் பெற்றது.

### பிறப்புக்கள்

- 1596 - ரேனே டெஸ்கார்ட்டஸ், தத்துவஞானி; கணித மேதை (இ. 1650)
- 1732 - ஜோசப் ஹேடன், மேற்கத்திய இசையறிஞர் (இ. 1809)
- 1890 - வில்லியம் பிராக், நோபல் பரிசு பெற்ற ஆங்கி லேயர் (இ. 1971)
- 1898-சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வ நாயகம், இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தவர் (இ. 1977)
- 1906 - Sin-Itiro Tomonaga, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியர் (இ. 1979)
- 1914 - ஒக்டாவியோ பாஸ், நோபல் பரிசு பெற்ற எழுத் தாளர் (இ. 1998)
- 1928 - இராம. அரங்கண்ணல், தமிழக எழுத்தாளர், திரைப்படத் தயாரிப்பாளர்
- 1934 - கார்லோ ரூபியா, நோபல் பரிசு பெற்ற இத்தா லியர்

### இறப்புக்கள்

- 1727 - ஐசாக் நியூட்டன், அறிவியலாளர் (பி. 1643)
- 1861 - ஹென்றி மார்ட்டின், ஈழத்தின் தமிழ் எழுத் தாளர், ஓவியர், மதப் பிரசாரகர்.
- 1917 - எமில் பேஹ்ரிங், நோபல் பரிசு பெற்ற ஜேர் மனியர் (பி. 1854)
- 1945 - ஹான்ஸ் ஃபீஷர், நோபல் பரிசு பெற்ற ஜேர் மனியர் (பி. 1881)
- 2001 - கிளிஃபோர்ட் ஷல், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1915)



### இரெனே தேக்கார்ட்டு

இரெனே தேக்கார்ட்டு 1596 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி பிறந்தார்.

இவர் ஒரு பிரான்ஸ் நாட்டு மெய்யியல் அறிஞர். இவரைத் தற்கால மேற்குலக மெய்யியலின் தந்தை எனப் பலரும் கருதுவர்.

இவர் கணிதத்துறையின் மேதைகளில் ஒருவர். இவர் இலத்தீன் மொழியில் ரெனேட்டஸ் கார்ட் டேசியஸ் (Renatus Cartesius) என அறியப்படுகின்றார்.

இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். தனது இளமையை பெரும்பாலும் டச்சுக் குடியரசில் கழித்த இவர் நவீன தத்துவவியலின் தந்தை எனப்புகழப்படுகிறார்.

இவருடைய எழுத்துகளில் தற்காலத்தில் மிக அதிகமாக வாசிக்கப் படும் மேற்கத்திய தத்துவங்களின் சாயல்கள் காணப்படும்.

இவருடைய "மெடிடேசன்ஸ் ஆப் ஃபர்ஸ்ட் பிலோசொபி" (Meditations on First Philosophy) என்ற நூல் பல பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....நாகராஜ் ஒரு பலாப்பழத்தை உரித்து சுளைகளை எடுத்து அடியவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். நாங்களும் அதனைப் பெற்றுச் சுவைத்தோம். சுந்தர மகாலிங்கத் தரிசனம் போலவே அத்தனை சுவையாய் இருந்தது.

இன்னும் நாகராஜன் புறப்பட்டபாடில்லை. அப்போது திடீரென்று உமா எதிரில் வந்தார். நாம புறப்பட்டுப் போய்கிட்டே இருப்போம். அவர் பின்னால வருவார் என்றார்.

பின்னாலேயா? வழி தெரியுமா?

வாருங்கள், மகாலிங்கய்யா நமக்குத் துணையிருப்பார். நாம் போவதற்குள் நாகராஜ் பாதி வழியில் வந்து நிற்பார்.

கஞ்சி மடத்திற்குப் பின்னால் இருக்கும் மாட்டுத் தொழுவத்தின் வழியாக மேலேறிச் செல்கிறோம்.

இப்பொழுது நாம் செல்ல இருப்பது தவசிப்பாறை. சாதாரணமாக அங்கு செல்ல இரண்டு மணி நேரப் பயணமாகும். நாங்கள் செல்வது குறுக்குப்பாதை. ஆகவே ஒரு மணி நேரம் அல்லது அதிகபட்சம் ஒன்றரை மணி நேரத்தில் சென்றுவிடலாம்.

பாறை பாதையல்ல, மண் பாதைதான். முதல் நாள் மழை பொழிந்திருக்கும் போலிருக்கிறது. மண் சொத சொத வென வழுக்கியது. நல்ல வேளையாக பாதையெங்கும் உதிர்ந்த இலைகள் மூடி இருந்ததால் எங்களால் ஓரளவுக்கு வழுக்காமல் ஏற முடிந்தது. பாதை செங்குத்துப் படிக்கட்டுகள் போல சென்றதால் கைப்பிடிக்குப் பக்கத்திலிருக்கும் குத்துச்செடிகளைப் பிடித்துக் கொண்டே ஏறத் தொடங்கினோம். ஒருசில இடங்களில் மேலே தாவியும், ஒரு சில இடங்களில் உட்கார்ந்து, நிமிர்ந்தும் ஏற வேண்டியிருந்தது.



கோரக்கர் குளம்

வழியெங்கும் காட்டு கொய்யாச் செடிகள் புதுத்தளிருடன் இன்முகம் காட்டி வரவேற்றன.

“கருப்பண்ணசாமீ!” குரல் கொடுத்தார் உமா.

“யாரைக் கூப்பிடுகிறீர்கள்?”

“எல்லாம் நம்ம நாகராஜைத்தான். அவர்தான் நமக்கு இப்பக் காவல் தெய்வம், வழிகாட்டியும் அவர்தான்.”

“இதற்கு முன் எத்தனை தடவை வந்திருக்கிறீர்கள்?”

“மூன்று தடவை வந்திருக்கிறேன்.

“மூன்று தடவையும் இவருடன்தான் வந்தீர்களா?”

“இல்லை, முதல் தடவை நான் தனியாகவே, கும்பலோடு கும்பலாக வந்து விட்டேன். அதற்குப்பிறகு இவரது அறிமுகம் கிடைக்கவே, அடுத்த தடவையிலிருந்து இவருடன்தான் இந்த தவசிக்குகை, அதற்கப்பால் பெரிய மகாலிங்கம் என்று பார்த்திருக்கிறேன்.

“பெரிய லிங்கத்தை அடுத்து வேறு என்னவெல்லாம் பார்த்திருக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

“வேறு என்னவெல்லாம் இருக்கிறது?” எதிர்க்கேள்வி கேட்டார் அவர்.

அதற்குள் ஒரு மரத்திருப்பத்தில் பாதை மாறியது. அங்கே ஒரு சிறு குட்டைபோல் நீர்த்தேக்கம்.

மேலே இலைச் சருகுகள் விழுந்து கலங்கல் போல தோன்றினாலும் சற்று விலக்கிப் பார்த்தால் அருமையான தெளிந்த சுத்தமான நீராகத் தெரிந்தது.

அது மஞ்சள் ஊற்று கடும் கோட்டைக் காலத்தில் கூட வற்றாதாம். அந்தச் சிறிதளவு நீரை வற்றாது என்று சொன்னது நம்புவதற்குக் கடினமாகத்தான் இருந்தது. இல்லையென்றாலும் கோரக்கர் காலம் முதல் இன்றுவரை இந்த ஊற்று வற்றாமல் இருந்திருக்குமா?

**ஆன்மீகம் 78**

சற்று இளைப்பாறி விட்டு குடிதண்ணீரை பாட்டிலில் சேமித்துக் கொண்டோம். மறுபடியும் பயணம். இப்போது செங்குத்தாக இல்லாமல் பக்கவாட்டிலும் குறுக்கிலுமாக இசட் வடிவில் ஜிக்ஜாக்காகச் சென்றது. ஒரு பாதையிலேயே மற்றொரு பாதையும் இருந்ததால் திருப்பங்களில் குழப்பம் ஏற்பட்டது. நல்லவேளையாகப் பக்கத்திலிருக்கும் ஒரு பாறையில் சுண்ணாம்பால் அம்புக்குறி வரையப்பட்டிருந்தது. சில இடங்களில் கூரான கல்லை வழிகாட்டி பலகைபோல் திருப்பி வைத்திருந்தனர்.

இன்னும் எவ்வளவு தூரம் நடக்க வேண்டும்?

“அதோ, அன்னார்ந்து பாருங்கள், பாறை தெரியுதா? அதுதான் தவசிப் ப்ாறை. நாம் தவசியை நெருங்கி விட்டோம்.

அன்னார்ந்து பார்த்தோம். கொஞ்ச தூரத்தில் பெரிய பாறைக்கூட்டமும் அதற்கு மேலே சிறிது உயரத்தில் மலை முகடும் தெரிந்தது. மலை முகட்டைக் காட்ட அதன்மேல் ஓம் என்று வரையப்பட்ட காவி கொடி ஒன்றை யாரோ கட்டியிருந்தனர். (தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி



ஈழத்தமிழர் விடுதலைக்கு இதயம் தந்த இமயம்!

# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

**90**

...முன்பு அண்ணா அவர்கள் நுங்கம்பாக்கம் வீட்டில் இருந்தபோது கட்சித் தேர்தல் பிரச்சினைகள் அலசி ஆராயப்பட்டது. கூட்டம் முடிந்தது. எல்லோரும் போனபின் செம்மலும் புறப்பட்டார். கொஞ்ச நேரம் இரு தம்பி. நீ என் அருகில் இருந்தால் எனக்கொரு நிம்மதி என்று அண்ணா செம்மலிடம் சொன்னதைக் கேட்டேன். அதனால்தான் செம்மலை அண்ணா தன் பக்கத்தில் வைத்துக் கொண்டார் போலும்!

நாடோடி மன்னனில் எம்.ஜி.சக்ரபாணி சொல்லுவார் “மண்ணாள வந்தவனை அம் மண்ணுக்கே சொந்தமாக்கி விடுவோம்” என்று.

அப்படி தமிழ் மண்ணை ஆண்டவர் மண்ணுக்கே சொந்தமாகி விட்டார். மக்கள் கண்ணுக்குள் நின்றவர் மண்ணுக்குள் மறைந்து விட்டார். இருந்தும் மக்கள் நெஞ்சை விட்டகலவில்லை. அவர் நிழல் மறைந்தது கண்ணை விட்டு. எல்லோர் மனதிலும் நினைவாக நின்றார். நிற்கிறார். நிற்பார்.


வந்த மக்கள் திரும்பினர். பிரதமர் ராஜீவ் காந்தி, பாபு ஜகஜீவன் ராம் போன்றவர்கள் கண்கலங்கி திரும்பினர். பெரும் மக்கள் போய்விட்டனர். பாமரர்கள்- பக்தர்கள் அங்கேயே இரவெல்லாம் இருந்தனர். காற்று உறங்கியது. கடல் உறங்கியது. அரைக் கம்பங்களில் பறந்த தர்ம சக்கரம் தாங்கி கொடிகளும் தர்மத்தின் தலைவன் போனதற்கு அசையாமல் நின்றன. பூமிக்கு வந்த நிலவு நீங்காத நித்திரையில் ஆழ்ந்துவிட்டது. த்து நிலவாய் சந்திரன் கடலோரம் தோன்றினாலும் அவன் துயரை யாரும் பார்க்க வேண்டாமென மேகத்துக்குள் மறைத்துக் கொண்டது தன் முகத்தை.



என்றும் முதல்வர்
எதிலும் முதல்வர்

‘என்’ என்பது ‘எம்’ என மாறும்போது உலகம் வாழும் மனிதர்கள் மேம்படு வானவர் என்பது தத்துவமேதை பிஸ்மார்க்கின் ஒரு சொல்.

இந்த ‘எம்’ என்பது ஆங்கில எழுத்



தாலும் தமிழில் பெரும் சொல். சமத்துவத்துக்குள்ள சொல்.

அந்த எம் எழுத்தை முதலில் கொண்டு வாழ்ந்தவர், வாழ்வித்தவர் நடிகராக இருந்தார்! தலைவராகத் திகழந்தார், முதல்வராக வாழ்ந்தார். நாட்டுக்குத் தெரியும் அவர் ஆட்சிக்கு வந்தபின்தான் முதல்வர் என்று. இல்லை. அதற்கு முன்பே முதல்வர். அவர் முப்பிறவி எடுத்து மும்முறை முதல்வர் எனத் தெரியும்: இல்லை... என்றும் முதல்வர்... எதிலும் முதல்வர்...

நடிகர் நடிகைகள் மாதாந்த சம்பளத்துக்குட்பட்டு பட நிறுவனங்களில் இருந்த நாட்களில் ஒப்பந்தம் பேசி படத்துக்கு இவ்வளவு ஊதியம் என நிர்ணயிக்கப்பட்டு நடித்ததில் முதல்வர். படம்:- ராஜகுமாரி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைவாத அரசியலை பா.ஜ.க. நடத்துகின்றது

## மன்மோகன் குற்றச்சாட்டு

(கும்தாய்)

நாட்டில் பிரிவினைவாத அரசியலை பா.ஜ.க நடத்துகின்றது என்று பிரதமர் மன்மோகன் சிங் குற்றம்சாட்டியுள்ளார்.

அசாம் மாநிலம், ஜோர்காத் மக்களவை தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் பிஜோய் கிருஷ்ண காந்திக்கை ஆதரித்து பிரதமர் மன்மோகன்சிங் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது,

நாட்டில் பா.ஜ.க பிரிவினைவாத அரசியலை நடத்துகின்றது. இந்தியா பல்வேறு கலாசாரங்கள், மதங்கள், மொழிகளைக் கொண்ட நாடு.

ஆனால், பா.ஜ.கவின் அரசியல் தனிப்பட்ட மனிதரை அடிப்படையாக கொண்டது. அவர்களிடம் நாட்டை முன்னேற்றுவதற்கு எந்த வித கொள்கையும் இல்லை. பொருளாதார முன்னேற்றம் இல்லாமல் வறுமையை ஒழிக்க முடியாது. முன்னேற்றம் இருந்தால்தான் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை கொடுக்க முடியும்.

குழந்தைகளின் சுகாதாரத்தில் முக்கிய கவனம் எடுத்ததால், இந்தியாவை போலியோ இல்லாத நாடாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் காங்கிரஸ் முயற்சியால்தான் இந்தியாவில் மாற்றத்தை கொண்டு வர முடிந்தது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இந்தியாவை முன்னேற்றும் நோக்கத்துடன் செயற்பட்டது என்று பிரதமர் மன்மோகன் கூறினார்.(2)

# ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராகின்றது

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

ஜெனீவா தோல்வியை அடிப்படையாக வைத்து, நாட்டு மக்கள் அரசாங்கத்துடன் இருப்பதாக காட்டும் நோக்கில், திடீர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக கூறப்படுகிறது.

நாட்டு மக்கள் அரசாங்கத்துடன் இருக்கின்றனர் என்று சர்வதேசத்திற்கு காண்பிப்பதற்காகவே ஜெனீவா வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, இரண்டு தினங்களுக்கு பின்னர் மேல் மற்றும் தென் மாகாண சபைகளின தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்திருந்தது அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

மாகாண சபைத் தேர்தலில் அதிகளவான வாக்குகள் கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது.

இதன் பின்னர், ஜனாதிபதித் தேர்தலை நடத்தலாம் எனவும் அரசாங்கம் உத்தேசித்திருந்தது.

எவ்வாறாயினும் ஆளும் கட்சிகு கடந்த தேர்தலில் கிடைத்த வாக்குகளை விட இந்த தேர்தலில் குறைந்தளவான வாக்குகளே கிடைத்துள்ளன.

மாகாண சபைத் தேர்தல்களின் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிடத்தக்களவு வாக்குகளை பெற்றுள்ளதுடன், ஜனநாயகக் கட்சி வாக்குகளை பிரித்துள்ளது.

அதேவேளை ஜே.வி.பியும் தனது வாக்குகளை இந்த தேர்தலில் கணிசமாக அதிகரித்து கொண்டுள்ளது. இவ்வாறான சூழலில் அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

ஜெனீவா தீர்மானத்தை வைத்து தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்ட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு, எதிர்பார்த்தளவு வாக்குகள் கிடைக்கவில்லை என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.(2)

# உலகில் மலிவு விலையில் கஞ்சா இந்தியாவிலேயே கிடைக்கும்

## ஆய்வில் தகவல்

(நியூயோர்க்)

சர்வதேச அளவில் போதைப் பொருட்களின் நடமாட்டம் மற்றும் அவற்றின் விலை விபரம் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில் உலகிலேயே மிக மலிவு விலையில் கஞ்சா கிடைக்கும் முதல் நாடு இந்தியாதான் என்பது தெரிய வந்துள்ளது.

சராசரியாக 5 ரூபாய் இருந்தால் இந்தியாவுக்குள் ஒரு கிராம் கஞ்சாவை வாங்கிவிட முடியும் என்று அந்த ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மலிவு விலையில் கிடைக்கும் நாடுகளாக, இந்தியா, தென்னாபிரிக்கா, கவுட்டெமலா, கென்யா, நைஜீரியா, பிரேசில், கொலம்பியா, டொமினிய குடியரசு என்பனவும் அதிக விலையில் கிடைக்கும் நாடுகளாக, ஐக்கிய அரபகம், புருனே, ஜப்பான், சிப்ரஸ், எஸ்டோனியா, பின்லாநது, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் என்பனவும் உள்ளதாக கணிக்கப்படுகிறது.

இதேபோல், கொக்கைன், ஹெராயன், போதை ஊசி மற்றும் போதை மாத்திரை வகைகள், ஒயின், பீர், குளிர் பானங்கள், சிகரெட் மற்றும் துரித உணவு வகைகள் எந்தெந்த நாட்டில் விலை மலிவாகவும், விலை மிகுதியாகவும் கிடைக்கின்றன என்றும பட்டியலிடப்பட்டுள்ளது. (2)

# இரட்டை குடியுரிமை வழங்குவதில் இலங்கை அரசு காலதாமதம்

## புலம்பெயர் மக்கள் அதிருப்தி

இரட்டைக் குடியுரிமை வழங்குவதில் அரசாங்கம் தொடர்ந்தும் தாமதம் காட்டி வருவதாக புலம்பெயர் மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடவடிக்கையானது தற்காலிக அடிப்படையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட இருப்பதனால் இவ்வாறு இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடவடிக்கைகள் கால தாமதம் அடைவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொள்வதற்கான கட்டணங்கள் உயர்த்தப்பட உள்ளதுடன், சில நிபந்தனைகளும் விதிக்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. புதிய சட்டத் திருத்தங்க்ள சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் முதலீடு செய்தல், சொத்துக்களை விற்பனை செய்தல், பெற்றோரை பராமரித்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக ப்லம் பெயர்ந்து வெளி நாட்டு குடியுரிமைகளைப் பெற்றுக் கொண்டுள்ள இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர். (2)

# புலிகளின் குற்றச்செயல்கள் ஐ.நா. தீர்மானத்திலில்லை

## அமைச்சர் சுசில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

1983ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு விசாரணை நடத்தப்பட வேண்டும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ளடக்கப்படவில்லை.

2002ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பில் மட்டுமே தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரந்தலாவை படுகொலைச் சம்பவம் ஸ்ரீ மா போதி மற்றும் தலதா மாளிகை மீதான தாக்குதல்கள் தொடர்பிலான சம்பவங்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் தீர்மானத்தை சமர்ப்பித்த மற்றும் இணை அனுசரணை வழங்கிய நாடுகளுக்கு இலங்கையின் நிலைமைகள் தெரியாது.

மேற்குலக நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து பல நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களித்துள்ளன என்றார். (2)

# இந்தியாவின் புறக்கணிப்பு அதிர்ச்சியளிக்கின்றது

## ஜி.கே.வாசன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா புறக்கணித்தது அதிர்ச்சியளிக்கிறது என்று ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு தந்திருக்க வேண்டும் என்று சென்னையில் காங்கிரஸ் பிரசார குறுந்தட்டை வெளியிட்டு மத்திய அமைச்சர் வாசன் பேட்டி அளித்தார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு பாதுகாவலர் என்றுமே காங்கிரஸ் தான் என்றும் தமிழகத்தில் உள்ள ம்ற்றை கட்சிகளை பற்றி காங்கிரசிற்கு கவலை இல்லை என கூறியுள்ளார். (2)







வலிகாமம் மேற்கு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் தொழிற்றிறன் கண்காட்சி அண்மையில் இடம் பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென், மேல் மாகாண சபைகளின் தேர்தல் முடிவு

| கட்சி | மேல்மாகாணம் | | தென்மாகாணம் | |
|---|---|---|---|---|
| | வாக்குகள் | ஆசனங்கள் | வாக்குகள் | ஆசனங்கள் |
| ஐ.ம.சுதந்திர கூட்டமைப்பு | 631,405 | 39 | 699,409 | 18 |
| ஐக்கிய தேசிய கட்சி | 236,201 | 6 | 310,267 | 14 |
| மக்கள் விடுதலை முன்னணி | 65,136 | 1 | 108,782 | 5 |
| ஜனநாயகக்கட்சி | 86,139 | 4 | 77,532 | 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 18,548 | 0 | 0 | 0 |
| ஜனநரயக மக்கள் முன்னணி | 4,300 | 0 | 0 | 0 |
| இ.தொழிலாளர் காங்கிரஸ் | 3,006 | 0 | 0 | 0 |

நடந்து முடிந்த தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 5 ஆசனங்களை குறைவாக பெற்றுள்ளது.

கடந்த முறை ஆளும் கட்சி 36 ஆசனங்களை கொண்டிருந்தது.

அம்பாந்தோட்டை மாவட் டத்தின் மொத்தமுள்ள 14 ஆசனங்களில் ஆளும் கட்சி 8 ஆசனங்களை கைப்பற்றியதுடன் ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆவணங்களையும் ஜே.வி.பி இரண்டு ஆசனங்களையும் கைப்பற்றியது.

சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆசனங்களை கைப்பற்ற வில்லை.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மாத்தறை மாவட்டத்தில் 12 ஆசனங்களை கைப்பற்றியிருந்துடன் அது இம்முறை 10 ஆக குறைந்துள்ளது.

அம் மாவட்டத்தில் 5 ஆசனங்களை கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை 4 ஆசனங்களை மட்டுமே கைப்பற்றியது. ஜே.வி.பி இரண்டு ஆசனங்களை கைப்பற்றியது.

ஜனநாயகக் கட்சி மாத்தறை மாவட்டத்தில் ஒரு ஆசனத்தை கைப்பற்றியது.

அதேவேளை காலி மாவட்டத்திலும் ஆளும் கட்சியின் வாக்குகள் குறைவடைந்துள்ளன.

காலி மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு தேர்தலில் 16 ஆசனங்களை கைப்பற்றிய ஆளும் கட்சி இம்முறை 13 ஆசனங்களை மாத்திரமே கைப்பற்றியது.

ஐக்கிய தேசியக் கட்சி 6 ஆசனங்களை கைப்பற்றியதுடன் ஜனநாயகக் கட்சி இரண்டு ஆசனங்களையும் ஜே.வி.பி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

தென் மாகாண சபையின் தேர்தல் முடிவுகளின்படி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 31 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 14 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சி 3 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதுடன் ஜே.வி.பி. 5 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தின் முக்கிய தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னணி வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில தேர்தல் தொகுதிகளில் ஆளும் கட்சி வெற்றியீட்டிய போதிலும், கொழும்பு மாவட்டத்தின் முக்கிய தொகுதிகளில் ஆளும் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சி பின்தள்ளியுள்ளது.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகளினது வாக்குகளும் அதிகரித்துள்ளன.

தெஹிவளை, இரத்மலானை, கொலன்னாவை, அவிசாவளை, கடுவல, கோட்டே, மஹரகம, மொரட்டுவ, ஹோமாகம ஆகிய தொகுதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னணி வகிக்கின்றது.

எனினும், கொழும்பு மத்தி, பொரளை, கொழும்பு மேற்கு, கொழும்பு கிழக்கு மற்றும் கொழும்பு வடக்கு ஆகிய தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னணி வகிக்கின்றது. (2)

## இராஜதந்திர உறவுகளை பேண குழு அமைக்கிறதாம் அரசாங்கம்

இலங்கை இராஜதந்திர அணுகு முறைகளில் மாற்றம் கொண்டு வரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனைத் தொடர்ந்து அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இராஜதந்திர உறவுகளைப் பேணுவது தொடர்பில் அரசாங்கம் குழு ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளது.

இராஜதந்திரிகள், புத்திஜீவிகள் மற்றும் நிபுணர்களின் ஒத்துழைப்புடன் இந்தக்குழு அமைக்கப்பட உள்ளது.

குறித்த குழுவை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் இந்த வாரத்தில் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் கடமையாற்றிய இலங்கையின் முன்னாள் பிரதிநிதிகளுக்கும் இந்த கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜெனீவா தீர்மானம் தோல்வியடைவதற்கு அரசாங்கத்தின் இராஜதந்திர உறவுகளில் நிலவிய குறைபாடுகளே காரணம் என குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு உயர்கல்வி அமைச்சர் செல்வார்

உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க ஏப்ரல் 4 ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு பயணிக்கவுள்ளதாக கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நூலக கட்டடத்திற்கு சம்பிரதாயபூர்வமாக நூலகளை மாற்றும் நடவடிக்கை யும் நூலகத்தின் வைபவ ரீதியான திறப்பு விழாவும் அன்றைய தினம் இடம் பெறும் என்று அவர் கூறினார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் காலை 11 மணியிலிருந்து 12 மணிவரை பல்கலைக்கழகத்தில் மேற் கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் அமைச்சர் பார்வை யிடவுள்ளதாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 18 ஆவது பட்டமளிப்பு விழா ஏப்ரல் 05 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.(2)

## இலங்கைக்கு வெளியே இருந்து கொண்டு யுத்தக்குற்றம் தொடர்பில் விசாரணை

### ஐ.நா.மனிதவுரிமை அலுவலகம் மேற்கொள்ளுமாம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு மனிதவுரிமைப் பேரவை இலங்கையின் உதவியை நாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளினால் இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனித வுரிமைப் பேரவை அமர்வுகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யுத்தக் குற்றச் செயல் விசாரணை உள்ளிட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்த இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு நாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இதன்படி, இலங்கைக்கு வெளியே இருந்து கொண்டு யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் ரேவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விசாரணை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இவ்வாறு வேறு நாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அநேகமான சர்வதேச விசாரணைகளினால் குறிப்பிட்ட அரசாங்கங்கள் நன்மை அடைந்ததில்லை எனவும், இதனால் வெளியே இருந்து கொண்டு விசாரணை நடத்துவது சாத்தியமானது எனவும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அலுவலகம் அறிவித்துள்ளது.

இலங்கையை ஓரம் கட்ட எத்தனிப்பதாகவும், பக்கச் சார்பாக செயற்படுவதாகவும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார். (2)



அகில நல்லுறவு ஒன்றியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சாமஸ்ரீ விருது வழங்கல் நிகழ்வு அண்மையில் திருகோணமலை செனட் .மோர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண முதலமைச்சர் [illegible] லயன்.க.சிவபாலனுக்கு (ஜே.பி) சாமஸ்ரீ தேசாபிமானி வழங்கி [illegible] அகில [illegible] அமைப்பின் தேசிய அமைப்பாளர் அல் ஹாஜ்.யூ.எல். எம் ஹனீபா (ஜே.பி) நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதையல் தோண்டிய ஒன்பது பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரக்காடு பிரதேசத்தில் புதையல் தோண்டிய 9 பேரை நேற்று முன்தினம் கைது செய்ததாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

காரக்காடு பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் இருந்த பிரதேசத்தில் புதையல் தோண்டிக்கொண்டிருந்தாகக் கூறப்படும் 9 பேரையே கைது செய்த இராணுவத்தினர், கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 8 தமிழர்களும் ஒரு முஸ்லிமும உள்ளனர். இவர்கள் கல்முனை, திருகோணமலை, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்களிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


இதேவேளை மட்டக்களப்பு மாவடடத்தின் கரடியனாறு பொலிஸ பிரிவுக்கு உட்பட்ட வெதம்பன்னாளி பிரதேசத்தில், சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 5 பேரை நேற்று முன்தினம் கைது செய்ததாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள இலங்கை மின்சார சபையின் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் தலைமையிலான குழுவினர், பொலிஸாரின் உதவியுடன் மேற்படி பிரதேசத்தில் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது, ஆண்கள் 3 பேரையும் பெண்கள் 2 பேரையும் கைது செய்ததாக பொலிஸார் கூறினர்.(2)

# காங்கிரஸ் அரசையும் அனைத்துலக நீதிமன்றக் கூண்டில் நிறுத்த வேண்டும்

## -வைகோ-



ஆர்மீனியா, ஜேர்மனி, உகாண்டா, ருவாண்டாவில் நடைபெற்ற கோரமான இனப்படுகொலைகளைப் போலவும், பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளில் அந்த நாடுகளில் எல்லாவற்றையும் தாண்டி யும் படுநாசத்தைச் சிங்கள அரசு தமிழ் இனப்படுகொலையாக நடத்தியது.

2010 ஒக்டோபர் 25இல் சனல்–4இல் வெளியான காணொளியில், 8 தமிழ் இளைஞர்கள் அம்மணமாக கண்கள், கைகள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக்கொல்லப்பட்ட கோரக்காட்சி.

அதே ஆண்டின் டிசெம்பர் 2 இல் வெளியான காணொளியில் தமிழ்ப் பெண் இசைப்பிரியா சிங்கள இராணுவ மிருகங்களால் கற்பழிக்கப்பட்டு மிகக் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட காட்சி.

2013 பெப்ரவரி 17 இல் வெளியான காணொளியில் மாவீர மகன் 12 வயதான பாலச்சந்திரன் மார்பில் 5 தோட்டாக்கள் பாய்ந்த நிலையில் மண்ணில் சடலமாகக் கிடந்த காட்சி.

இந்த 2014 ஜனவரி இறுதி வாரத்தில் தெரிய வந்த காணொளியில் தமிழ் இளம்பெண்கள் சிங்கள இராணுவ வெறி நாய்களால் கோரமாகக் கற்பழிக்கப்பட்டு, அங்கங்களைச் சிதைத்துக் கொல்லப்பட்ட நிலையில், ஆடைகளற்ற நிலையில் கிடந்த அந்தச் சடலங்களை, சிங்களக் கூட்டத்துக்கு மத்தியில் மண்ணில் போட்டு, அந்த உடல்கள் மீது இதுவரை உலகில் எங்கும் நடைபெறாத விதத்தில், நெஞ்சை நடுங்கச் செய்வதும், சொல்லிலோ எழுத்திலோ கூற முடியாததுமான அக்கிரமத்தில் சிங்கள ஓநாய்கள் ஈடுபட்ட காட்சி.

கடந்த வாரத்தில் கிடைத்த காணொளியில் ஒரு குளக்கரையில் ஏராளமான தமிழ் இளைஞர்கள் அம்மணமாக துப்பாக்கி முனையில் உட்கார வைக்கப்பட்டு, பின்னர் ஒவ்வொருவராக கைகள் பின்புறமாக கட்டப்பட்ட நிலையில் சுட்டுக்கொல்லப்படும் கொடுந்துன்பக் காட்சி.

இவை அனைத்தும் அனைத்துலக மனித குலத்துக்கு இன்னமும் மனச்சாட்சி இருக்கிறதா? என்று கேள்வி எழுப்பும் அறைகூவல் ஆகும்.

நானிலத்தில் தமிழ் இனத்துக்கு நாதியே இல்லையா? நீதியே கிடையாதா? என்ற தமிழ்க் குல மக்களின் ஓலக்குரல் உலகின் மனச்சாட்சியின் கதவுகளைப் பலமாகத் தட்டியதால், அதுவரை குருடாக இருந்த உலகோரின் கண்கள் மெதுவாக விழித்தன. செவிடாக இருந்த உலகத்தின் காதுகள் மெதுவாகத் திறந்தன.

அதன் விளைவாகவே, 2009 இல் சிங்கள அரசுக்குப் பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றிய ஜெனிவாவின் மனித உரிமை கவுன்சிலில் 2011 இல் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டு, 2012 இல் தமிழகத்தில் வெடித்த மாணவர் கிளர்ச்சியால் சிங்கள அரசுக்கான ஆதரவு நிலை மாறி தமிழர்களுக்கான நியாயத்தின் குரல் மேலும் வலுப்பெற்று, 2013இல் அமெரிக்கத்தீர்மானம் நீர்த்துப்போனது என்றாலும் எதிர்காலத்தில் நீதிக்கான நம்பிக்கையை விதைத்தது.

இந்த ஆண்டு ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 25ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்க அரசு, இங்கிலாந்து, மாண்டிநீரோ, மாசிடோனியா, மொரிசியஸ் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து ஒரு வரைபுத் தீர்மானத்தைத் தாக்கல் செய்தது. அந்தத் தீர்மானத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, தமிழர்களுக்கு முழு நீதிக்கான அழுத்தம் குறைக்கப்பட்டது.

எனினும் இத்தீர்மானம் கடந்த வாரம் விவாதத்துக்கும் வாக்கெடுப்புக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுது, பாகிஸ்தான் அரசின் பிரதிநிதி, இந்த விவாதத்தை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அந்தக் கோரிக்கையின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்தியாவும், சீனா, கியூபா, ரஷ்யாவும் பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்து வாக்களித்தன. எனினும் நீதியின்பால் தாகமுள்ள பல நாடுகள் பாகிஸ்தானுக்கு எதிராக வாக்கு அளித்ததால், அக்கோரிக்கை மனித உரிமை கவுன்சிலில் நிராகரிக்கப்பட்டது.

இதனை அடுத்து பாகிஸ்தான் அரசு இன்னொரு அக்கிரமத்தைச் செய்தது. அமெரிக்கா உள்ளிட்ட 5 நாடுகளின் வரைபுத் தீர்மானத்தில் 10 ஆவது பத்தியில் உள்ள ஏ.பி.சி மூன்று உட்பிரிவுகள் அடங்கிய பத்தாவது பத்தியின் வாசகங்கள் முழுமையாக தீர்மானத்தில் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தது.

**10 ஆவது பத்தி கூறுவது இதுதான்:**

இலங்கையில் நீதிக்கான நம்பகமான விசாரணை உள்நாட்டு அளவில் நடைபெறாத சூழலில், மனித உரிமைகள் அழிக்கப்பட்டது குறித்துச் சுதந்திரமான அனைத்துலக நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையர் தந்துள்ள பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு இலங்கையில் மனித உரிமைகள் குறித்த ஆய்வை மேற்கொள்ளவும் சிங்கள அரசே நியமித்த நல்லிணக்க ஆணைய விசாரணை நடத்தியதாகச் சொல்லும் கால கட்டத்தில் நிகழ்ந்த கடுமையான மனித உரிமை மீறல்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மனித உரிமை கவுன்சிலின் 27 ஆவது கூட்டத் தொடரில் வாய்மொழியாக மனித உரிமை ஆணையர் அறிக்கை தர வேண்டும். 25 ஆவது கூட்டத் தொடரில் இப்பொழுது நிறைவேற்றப்படும் தீர்மானம் செயற்படுத்தப்பட்ட விதம் குறித்து விவாதித்து எழுத்து மூலமாக ஒரு விரிவான அறிக்கையை 28 ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழர்களுக்கு நீதிக்கான வெளிச்சத்தை தர முற்பட்ட இந்த பத்தாவது பத்தியை முழுமையாக நீக்க வேண்டும் என்று நீதியை நிரந்தரமாகக் குழிதோண்டிப் புதைப்பதற்காக சிங்களக் கொலைகார அரசுக்குக் கைக்கூலியாக பாகிஸ்தான் அரசு கொண்டு வந்த அயோக்கியத்தனமான இந்தக் கோரிக்கை மீது மனித உரிமை கவுன்சிலில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தமிழ் இனக் கொலைக்கூட்டுக் குற்றவாளியான இந்திய அரசு, பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்து, சீனா, கியூபா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் சேர்ந்து வாக்களித்தது. எனினும் உலகில் நீதி செத்துவிடவில்லை என்பதால் வாக்கெடுப்பில் பாகிஸ்தான் கோரிக்கையை எதிர்த்துப் பெரும்பான்மை நாடுகள் வாக்களித்துத் தோற்கடித்தன.

அதன்பின்னர் வரைபுத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அமெரிக்க அரசின் தீர்மானத்தை ஆதரித்து, 23 நாடுகள் வாக்களித்தன. கியூபா, ரஷ்யா, சீனா, வெனிசுலா, பாகிஸ்தான், பெலாரஸ், சிம்பாப்வே உள்ளிட்ட 12 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

வாக்கெடுப்பில் பங்கேற்காமல் பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டுகின்ற விலாங்கு மீன் ஏமாற்று வேலையைச் செய்த பன்னிரண்டு நாடுகளின் பட்டியலில் இந்திய அரசும் சேர்ந்து கொண்டது. இந்தியா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இது குறித்து இந்தியாவின் பிரதிநிதி, திலீப் சின்கா தனது அறிக்கையில் பின்வருமாறு கூறுகிறார்.

அமெரிக்கத் தீர்மானம் இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடுவதாகவும் அதன் இறையாண்மையைக் குலைப்பதாகவும் அமைந்துள்ளது. இலங்கை அரசு ஆக்கபூர்வமான புனரமைப்பு வேலைகளைச் செய்து நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2009, 2012, 2013 தீர்மானங்களை இந்தியா ஆதரித்தது என்கிறார் இந்த யோக்கிய சிகாமணி.

1970 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் ஒரு பகுதியான கிழக்கு பாகிஸ்தானில் சுதந்திர வங்கதேசம் வேண்டும் என்று முஜிபுர் ரஃகுமான் தலைமையில் கிழக்கு வங்காள மக்கள் போராடிய போது முக்தி வாகினியை ஆதரித்து இந்தியத் தளபதி மானக்ஷா தலைமையில் இந்திய இராணுவத்தை கிழக்கு பாகிஸ்தானுக்குள் அனுப்பி பாகிஸ்தான் இராணுவத்தோடு போர் புரிந்து, தோற்கடித்து, பாகிஸ்தான் இராணுவத்தினரை கைதாக்கிச் சரணடையச் செய்து, சுதந்திர வங்கதேசத்தை அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அமைத்துத் தந்தபோது கிழக்கு பாகிஸ்தானில் நடப்பது உள்நாட்டுப்பிரச்சினை அல்ல, அனைத்துலகத்தின் மனித உரிமைகள் பிரச்சினை என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்த வரலாறு சோனியா காந்தியின் கைப்பாவையான மன்மோகன் சிங் அரசுக்கு மறந்துவிட்டதா? அல்லது காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு புத்தி பேதலித்து விட்டதா?

1983 ஓகஸ்ட் 16 இல் இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியம்மையார் அவர்கள் இலங்கையில் நடப்பது தமிழினப்படுகொலை. வடக்கு– கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்கள் இலங்கைத் தீவின் பூர்வ குடிமக்கள் என்று அறிவித்ததை அறியாத முட்டாள்களின் அரசா இன்றைய காங்கிரஸ் அரசு.

2009 ஆம் ஆண்டு மனித குல வரலாற்றின் பேரழிவுகளில் ஒன்றான முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை மே 17,18 ஆம் திகதி வரை நடத்தப்பட்டபிறகு ஜேர்மனி உள்ளிட்ட 17 நாடுகள் ஜெனிவாவில் மனித உரிமை கவுன்சிலின் அவசரக்கூட்டத்துக்கான தாக்கீதை எழுத்து மூலமாகத் தந்ததால் 2009 மே 26 ஆம் திகதி மனித உரிமைக் கவுன்சில் அவசரக்கூட்டம் கூடியது.

ஆனால், அனைத்துலகத்தின் நீதி பகிரங்கமாக தூக்கில் இடப்பட்டதுபோல கவுன்சிலில் உறுப்பினரல்லாத சிங்கள அரசு தன்னைத் தானே பாராட்டி தயாரித்த தீர்மானத்தை கியூபாவும் இந்தியாவும் வரிந்து கட்டிக்கொண்டு ஆதரவைத் திரட்டி நிறைவேற்றியபோது இந்தியா உள்ளிட்ட 29 நாடுகள் தமிழ் இனக் கொலை செய்ததற்காக மகிந்த ராஜபக்ச அரசுக்கு கிரீடம் சூட்டிய தீர்மானத்தை வெற்றி பெறச் செய்தன.

12 நாடுகள் இப்பாராட்டுத் தீர்மானத்தை எதிர்த்து வாக்குப்போட்டன. மொத்தமுள்ள 47 நாடுகளில் 6 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. அப்பொழுது மனித உரிமைக் கவுன்சிலில் அமெரிக்க நாடு உறுப்பினரல்ல.

தமிழர்கள் என்னாளும் மன்னிக்க முடியாத துரோகத்தை அன்றும் செய்த இந்திய அரசுக்கு கண்டனம் தெரிவித்து, ஊர் ஊராகச் சென்று என் மனக்குமுறல்களை மேடைகளில் கொட்டினேன்.

ஈழத்தில் இனக்கொலை; இதயத்தில் இரத்தம் என நான் தயாரித்த குறுந்தகட்டில் மேற்கூறிய செய்தியை ஆவணம் ஆக்கினேன். இந்திய அரசின் பிரதிநிதி 13 ஆவது சட்டத் திருத்தம் பற்றி உளறியிருக்கிறார். 1987 இல் விடுதலைப் புலிகளுக்கும் தமிழர்களுக்கும் துரோகம் செய்து ஜெயவர்த்தனவோடு இணைந்து ராஜீவ் காந்தி போட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில், வடக்கு- கிழக்கு இணைப்புப் பற்றிச் சொல்லப்பட்டது. ஒப்பந்த மையின் ஈரம் உலர்வதற்குள் ஜெயவர்த்தன இணைப்புக்கு எதிராக பிரசாரம் செய்வேன் என்றார். ராஜீவ் காந்தி அரசு வாய் மூடி பதுங்கியது. 13 ஆவது சட்ட திருத்தத்தை அப்போதே ஈழத் தமிழர்கள் ஏற்கவே இல்லை.

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைப்புக்கு எதிராக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் கொழும்பு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்த போது இந்திய அரசு அதனை எதிர்த்து முணுமுணுக்கக் கூட இல்லை. அப்படியானால் இந்திய அரசு தன் நினைவு இழந்து கோமா நிலைக்குச் சென்றுவிட்டதா? என்பதே கேள்வியாகும்.

ராஜீவ் காந்தி பிரதமர் ஆனதிலிருந்து நேற்றுவரை காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு ஈழத் தமிழர்களுக்கும் தமிழ் இனத்துக்கும் மன்னிக்கவே முடியாத துரோகம் செய்வதற்குக் காரணம் என்ன?

ஒரேயொரு காரணம்தான். கடந்த 10 ஆண்டுகளாக நான் கூறிவரும் காரணம்தான். ஈழத் தமிழ் இனப்படுகொலையில் இந்திய அரசு கூட்டுக்குற்றவாளி என்பதே அக்காரணம் ஆகும்.

நீர்த்துப்போன தீர்மானம் என்று நான் குறை கூறியபோதிலும் உலகில் நீதி மரித்துப் போகவில்லை என்பதால் சிறிதளவாவது நீதிக்கான நகர்வாக அமெரிக்க வரைபுத் தீர்மானம், ஜெனிவா வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

உலகெங்கும் உள்ள ஈழத் தமிழர்களும் தமிழ்க்குல மக்களும் மனித உரிமை ஆர்வலர்களும் இனி மேற்கொள்ள வேண்டிய சூளுரை ஒன்றுதான். இனக்கொலைக் குற்றவாளியான ராஜபக்ச அரசையும் கூட்டுக் குற்றவாளியான சோனியா காந்தி இயக்கிய இந்திய காங்கிரஸ் அரசையும் அனைத்துலக நீதிமன்றத்தின் குற்றவாளிக்கூண்டில் நிறுத்த வேண்டும்.

ஈழத்தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்பட்டு, இராணுவமும் பொலிசும் முற்றாக வெளியேற்றப்பட்டு விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஈழத் தமிழர்கள் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டு ஐ.நா. சபையின் மேற்பார்வையில் ஒரு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான பொதுவாக்கெடுப்பு உலக நாடுகளின் மேற்பார்வையில் நடைபெற வேண்டும்.

2011 ஜுன் முதலாம் திகதி பிரஸ்ஸல்சில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற கட்டட அரங்கில் நான் முதன் முதலாக பிரகடனம் செய்ததுபோல் அகிலத்தின் பல்வேறு நாடுகளில் வாழும் புலம் பெயர் ஈழத்தமிழர்கள் சுதந்திர தமிழ் ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பில் அவர்கள் வாழும் நாடுகளிலேயே பங்கேற்கும் நிலையை ஐ.நா. மன்றம் ஏற்படுத்த வேண்டும். தமிழ் இனப்படுகொலை செய்த சிங்கள அரசையும் கூட்டுக்குற்றவாளியான இந்திய காங்கிரஸ் அரசையும் அனைத்துலக நீதிமன்றக் கூண்டில் நிறுத்த வேண்டும்.

தமிழ் ஈழ விடுதலைக்காக செங்குருதி சிந்தி உயிர் நீத்த விடுதலைப்புலிகளின் மீது ஆணை! சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் சிந்திய இரத்தத்தின் மீது ஆணை! ஈழத்தமிழரைக்காக்க மரணத் தீயைத் தழுவிய முத்துக்குமார் முதல் முருகதாஸ் வரை உயிர்த்தியாகம் செய்த உத்தமர்கள் மீது ஆணை!

அறம் வெல்லும்! தமிழர்களுக்காக நீதி கிடைக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க தவறின் பாதமான விளைவுகள் ஏற்படும்

## எச்சரிக்கின்றார் ஐ.நா.நிபுணர்குழுவின் உறுப்பினர் யாஸ்மீன் சூகா

(கொழும்பு)

**இலங்கையின் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க முடியும் என ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் உறுப்பினர் யாஸ்மீன் சூகா தெரிவித்துள்ளார். இலங்கை விவகாரம் தொடர் பில் ஆலோசனை வழங்குவத ற்காக தருஸ்மான் தலைமையில் நிறுவப்பட்ட நிபுணர் குழுவில் சூகாவும் அங்கம் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.**

எவ்வாறான தடைகள் விதிக்கப்படும் என்பதனை குறிப்பிட முடியாத போதிலும் தடைகள் விதிக்கப் படக் கூடிய சாத்தியங்கள் காணப் படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் பாதகமான விளைவுகளை எதிர் நோக்க நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரச அதிகாரிகளுக்கான பயணத்தடை, வெளிநாட்டு முதலீட்டு தடை, சொத்து முடக்கம் போன்ற பல்வேறு வழிகளில் தடைகள் விதிக்கப்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் சுயாதீன விசாரணைகளை இலங்கை ஜனாதிபதி நிரகாரித்தமை அதிர்ச்சியளிக் கும் வகையில் அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணையை அவ் அரசாங்கம் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

அது மட்டுமன்றி ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் தான் இலங்கையை விசாரிக்க காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

### சீரணி நாகபூசணி அம்பாள் வருடாந்த மஹோற்சவம்

சண்டிலிப்பாய் -சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும்.

இதில் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும். (2)

# அமெரிக்க தீர்மானம் குறித்து ஜனாதிபதியை சந்திக்க விரையும் அமைச்சர்கள்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சில அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

அமைச்சர்களான நவீன் திஸாநாயக்க, வாசுதேவ நாணயக்கார, ரெஜினோல்ட் குரே, திஸ்ஸ விதாரண , ராஜித சேனாரட்ன ஆகியோர் விரைவில் ஜனாதிபதியை சந்திக்க உள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சில வேளைகளில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம் எனவும், அவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அதனை எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கைக்கு வெளியே விசாரணை பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட்டால் அதனை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# இந்தியாவின் நல்லெண்ணத்தை இலங்கை கட்டியெழுப்ப வேண்டும்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)


இந்தியா, இலங்கை மீது வெளிப்படுத்தியுள்ள நல்லெண்ணத்தின் அடிப்படையில் இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும் என்று மனித உரிமைகள் சம்பந்தமான விசேட பிரதிநிதி மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.


அமெரிக்காவின் பிரேரணை வாக்களிப்புக்கு வருவதற்கு முன்னர் இரண்டு வாக்களிப்புகள் இடம் பெற்றிருந்தன.

குறித்த பிரேரணையை ஒத்தி வைப்பதற்கும், அந்த பிரேரணையில் உள்ள சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் 10 ஆம் சரத்தை நீக்குவதற்குமாக இந்த இரண்டு யோசனைகளை பாகிஸ்தான் கொண்டு வந்தது.

இந்த இரண்டு யோசனைகளுக்கும் இந்தியா, பாகிஸ்தானுடன் இணைந்து இலங்கைக்கு ஆதரவாகவே வாக்களித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து இலங்கை மீது இந்தியா கொண்டுள்ள நல்லெண்ணம் வெளிப்பட்டிருப்பதாகவும் அவர் கூறி இருக்கிறார். (2)





சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான பிரிவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட முறைப்பாட்டுப் பிரிவில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. பி. விமலசேன திறந்து வைப்பதையும் கலந்து கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

# சேது சமுத்திரத்திட்டம் முன்னெடுக்கப்பட்டால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்

## தமிழக முதல்வர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடற்பரப்பில் சேது சமுத்திரத் திட்டத்தை முன்னெடுக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் தமிழக முதல்வர் இதனைக் குறிப்பிட்டதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் தென் கிழக்கு கடல் பகுதியான இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலுள்ள மணல் பாறை பகுதியில் சேது சமுத்திரத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கைக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதன் காரணமாக சேது சமுத்திரத் திட்டம் நீண்டகாலமாக இழுபறி நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழக முதல்வர் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படலாம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இலங்கை மற்றும் இந்திய கடற்கரை சுற்றுச்சூழலும் பாதிக்கும் அபாயம் உள்ளதாகவும், இந்த காரணங்களால் சேது சமுத்திரத் திட்டம் அநாவசியமானது என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

### நிர்வாகிகள் தெரிவு

(இராமநாதபுரம்)

வள்ளிபுனம் கிராம அபிவிருத்திக் குழு கூட்டம் கடந்த 28 ஆம் திகதி சிவில் பாதுகாப்புக்குழு தலைவர் ஐ.மாதவராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிராம அலுவலர் ஜெயதாஸ், 682 ஆம் படையணியின் இராணுவத் தளபதி கேணல் வனசிங், லெப் கேணல் அனில் ஜயரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக பி.சிவகுமார், உப தலைவராக ஐ.மாதவராசா, செயலாளராக திருமதி ஆர், பத்மாவதி, உப செயலாளராக எஸ். ரூபன் , பொருளாளராக சசிகலா ஆகியோர் தெரிவாகினர். (2-269)

# பீரிசின் குற்றச்சாட்டுக்கு அமெரிக்கா மறுப்பு

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு வாக்களிக்குமாறு சில நாடுகளை அமெரிக்காக அச்சுறுத்தியதாக கூறப்பட்ட கருத்துக்கு அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்ற கூட்டமொன்றில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கலந்து கொண்டு உரையாற்றும்போது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்குமாறு அமெரிக்கா சில நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், அந்நாடுகளை அமெரிக்கா எச்சரித்திருக்கும்.

சில நாடுகள் தீர்மானத்தை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஏனெனில் அந்நாடுகள் அமெரிக்காவுடன் வலுவான பொருளாதார உறவுகளைக் கொண்டுள்ளன என தெரிவித்திருந்தார்.

இக்கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்த கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஜூலியானா ஏஸ்பாவன், சர்வதேசத்திலிருந்து தெளிவான செய்தி கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

அச்சுறுத்தல் விடுக்கவில்லை. உண்மையில் ஐ.நா மனித உரிமைகள் சபையிலிருந்து தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இலங்கை நல்லிணக்கம், பொறுப்பு அர்த்தமுள்ள, உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென சர்வதேச சமூகம் கோரிக்கை விடுக்கின்றது என்றார். (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மல்லாவி நகரத்தின் வீதிப் புனரமைப்பு அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது

## மாந்தை கிழக்கு பிரதேச சபை உபதலைவர் குற்றச்சாட்டு

மல்லாவி நகரப்பகுதி வீதிப் புனரமைப்பு பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் உப தலைவர் சி. செந்தூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் அரசாங்கத்தின் அனுசரணையுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதிப் புனரமைப்பில் மல்லாவி நகரப்பகுதியில் நில மட்டத்திலிருந்து $4\frac{1}{2}$ அடி உயரத்திற்கு மேல உயர்த்தப்பட்ட நிலையில் தாங்கள பாதிக்கப்படுவதாக பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள போன்றோர் எம்மிடம் முறையிட்டிருக்கின்றார்கள்.

இது சமபந்தமாக அவர்களுடன் கலந்துரையாடிய போது பிரதான வீதியில் அதிக உயரமாகவும் சதுப்புத்தன்மை அற்றதுமான பகுதியிலேயே மல்லாவி நகரம் அமைந்துள்ளது.

இவ் வீதி சம்பந்தமாக பொதுமக்களுக்கு உரிய விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை. தற்போது இதன் பாதிப்புக்கள் குறித்து, குறித்த பகுதி மக்கள் கேள்வி எழுப்பத்தொடங்கிய நிலையில் பொருத்தமான இடத்தில் இவ் வீதி உயர்த்தப்படவில்லை.

இதன் தாக்கம் இந்நகரத்தினையே எதிர்காலத்தில் கேள்விக் குறியாக்கும் முயற்சியாகக் காணப்படுகின்றது. இவ்வாறு அதிகமாக உயர்த்தப்பட்ட தூரம் அண்ணளவாக 400மீற்றருக்கு உட்பட்டவையாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட தூரத்தினையுடைய வீதியினை பொருத்தமான வகையில் மாற்றி அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை பொதுமக்கள் கேட்டிருந்த போது அவ்வீதிக்காக 18 கோடிக்கு மேல் செலவழித்துள்ளதாகவும் இவ் வீதியினை மீள பதிக்க முடியாது எனவும் கூறி இதற்குத் தீர்வாக இப்பிரதேசத்திற்கு பொருத்தமற்ற வகையில் மீளவும் அதிக நிதி செலவழித்து கீழ் வீதி புனரமைப்புச் செய்யப்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

உண்மையிலே அபிவிருத்தித் திட்டம் என்பது பொதுமக்களுக்கு நன்மை பயப்பதற்காகவே நடைமுறைப்படுத்தப்படுவது, தற்காகவே அரசாங்கம் அதிகளவான சம்பளங்களை வழங்கி அதிகாரிகளை நியமித்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது வழமையாகும்.

யாரோ விட்ட தவறுக்காக பொதுமக்களை அசௌகரியப்படுத்தும் முயற்சிக்கு உள்ளாக்காமல் ஏ9 வீதிக்கு மேற்குப்புறத்தே உள்ள இந நகரத்தின் பொருத்தப்பாடுகளை சரியாக இனம் கண்டு இது சம்பந்தமான விளக்கங்களை இப்பிரதேச பொதுமக்கள், மாணவர்கள், வர்த்தகர்கள் போன்றோருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை வெளிப்படையாக எடுப்பதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு இவ்வீதி சம்பந்தமாக கேள்வி எழுப்பியவர்களின கேள்விகளுக்கு இவ்வீதியினை முழுமையாக புனரமைப்புச் செய்யாமலும், இன்றைய தினத்திற்கு பின்னர் எந்த வேலைத்திட்டமும் நடைபெறாது எனவும் இவ்வீதிகள் சம்பந்தமாக எதிர்க்கேள்விகள் கேட்டால் இப்புனரமைப்பை நிறுத்துவோம் எனவும் அதிகாரிகள் பொதுமக்களை அச்சப்பட வைக்கின்ற விடயங்களைத் தவிர்த்து சம்பந்தப்பட்டவர் சரியான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என அவ் அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-250-266)



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் கூட்டுறவுச் சங்கத் திறப்பு விழா அண்மையில் இடம் பெற்ற போது... (படம்:-மல்லாகம் செய்தியாளர்)

# சிறுவர் இல்லத்திலிருந்து வெளியேறிய நான்கு சிறுமிகள் மீள ஒப்படைப்பு

(வவுனியா)

வவுனியா சிறுவர் இல்லத்தில் இருந்து வெளியேறிய நான்கு சிறுவர்களில் மூவர் மீள சிறுவர் இல்லத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் ஒருவர் சிறுவர் நன்னடத்தை பிரிவின் கண்காணிப்பில் உள்ளதாகவும் சிறுவர் இல்ல நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

எமது சிறுவர் இல்லத்தில் இருந்த நான்கு சிறுவர்கள் எவருக்கும் தெரியாமல் வெளியேறியுள்ளனர்.

மார்ச் 25 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எனினும் சம்பவத்துடன் தொடர்புபட்ட சிறுமிகள் எவ்வித பாதிப்புகளும் இன்றி பொலிஸார் மற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மூலம் மீள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு சிறுமி மீண்டும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களின் பராமரிப்பில் மீளிணைக்கப்பட்டுள்ளார்.

இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது என உறுதியளிப்பதுடன் இது தொடர்பான மேலதிக செயற்பாடுகளில் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது என தெரிய வருகின்றது. (2)




# கருங்கல் உடைக்கும் ஆலையால் சுற்றுச்சூழல் குடும்பங்கள் பாதிப்பு

(கல்விளான்)

துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட துணுக்காய் கல்விளான் வீதியில் உள்ள கருங்கல் உடைக்கும் ஆலையால் சுற்றுச்சூழலிலுள்ள குடும்பங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இந்த ஆலையை அகற்றி வேறு இடத்தில் அமைக்குமாறு துணுக்காய் பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றி சுற்றுச்சூழல் அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

குறித்த ஆலைக்கு அருகில் உள்ள இரண்டு பாடசாலை மாணவர்களுக்கு சுவாச நோய் ஏற்பட்டுள்ளதுடன் கிணறுகளும் மாசடைந்து காணப்படுகின்றன.

இது பற்றி துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனிடம் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பாதிப்புக்குள்ளான இரு சிறுவர்களையும் அக்குடும்பத்தினரையும் அனந்தி சசிதரன் பார்வையிட்டதுடன் இதனை வட மாகாண சபைக்கு தெரியப்படுத்தி உரிய தீர்வு பெற்றுத் தருவதாக அக் குடும்பங்களிடம் உறுதியளித்துள்ளார். (2-28)

# வீட்டுத்திட்டத்திற்கான நிதியை தாமதமின்றி வழங்குங்கள்

## பயனாளிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தியன் வீட்டுத்திட்டம் சில கிராமங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முதல் கட்ட கொடுப்பனவாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் அடுத்த கட்ட கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் குறிப்பிட்ட வீட்டின் அளவுப் பிரமாணத்தின் படி பயனாளிகளால் கூரை மட்டத்திற்கு வீடுகளை கட்டி முடித்துள்ள நிலை காணப்படுகின்றது.

நாளுக்கு நாள் கட்டுமானம் பொருட்களின் விலை அதிகரித்து செல்வதால் இந்த வீட்டுதிட்டத்தை முழுமையாக கட்டி முடிப்பதற்கு முடியாமல் போய் விடுமோ என பயனாளிகளால் அச்சம் வெளியிடப்படுகிறது.

எனவே, வீட்டுத்திட்டத்திற்கு என ஒதுக்கப்பட்டுள்ளதன்படி வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கும் தமக்கு வழங்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நிதியினை விரைவில் வழங்குவதற்கு சம்பந்தப்பட்டவர்களும் உரிய அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-254)

# குடியமர்த்தப்பட்டு ஏழு வருடங்களாகியும் கற்குளம் கிராம மக்களுக்கு குடிநீர் பிரச்சினை

(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிதம்பரபுரம் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கற்குளம் கிராம மக்கள் பாரியளவு குடிநீர் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டு நாட்டின் யுத்த நடவடிக்கை காரணமாக வன்னிப் பகுதிகளில் பலதரப்பட்ட இடங்களில் வாழ்ந்தவர்களும் இடம்பெயர்ந்து வவுனியா சிதம்பரபுரம் இடைத்தங்கல் நலன்புரி நிலையத்தில் பலவருடங்களாக வாழ்ந்து வந்தனர்.

இவர்களுள் ஒருதொகுதியினரை 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிதம்பரபுரத்தை அண்டிய முருகன் மலை அடிவாரங்களில் இருந்த காட்டுப்பகுதி அழிக்கப்பட்டு கற்குளம் படிவம் 1, படிவம்2, படிவம்3, படிவம்4 என்ற கிராமங்கள் உருவாக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

குடியமர்த்தப்பட்ட காலங்களில் இருந்து இற்றைவரை நீர் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. ஆரம்பத்தில வவுனியா பிரதேச சபை, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தண்ணீர் பவுசர் மூலம் மக்களுக்கு நீர்விநியோகம் செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

பின்னர் குறித்த கிராமங்களில் குழாய் கிணறுகள் அமைத்து கொடுக்கப்பட்டது. அதன்பின நீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டது. இருப்பினும் ஆடி, ஆவணி மாதங்களில் குழாய் கிணறுகளிலும் தண்ணீர் மட்டம் குறைந்துவிடுவதனால் குடிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் நீரை பெறுவதற்கு அயல்கிராமங்களை நாடிச்செல்லவேண்டிய சூழ்நிலை நிலவுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் மழைவீழ்ச்சி குறைவடைந்த காரணத்தினால் மாசி மாதகாலப் பகுதியிலேயே கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து நீர்வற்றி வறட்சி நிலவுகின்றது. குடிப்பதற்கும் நீராடுவதற்குமான நீரை பெறுவதற்கு மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

சுமார் 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் குறித்த கிராமத்தில் 10 குழாய்க் கிணறுகள் உள்ள போதிலும் அவற்றில் குறிப்பிட்ட அளவு நீரையே பெறக்கூடியதாக உள்ளது எனவும் தெரிவிக்கின்றனா.

இதன்காரணமாக காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் குழாய கிணற்றில் வரிசையில் நின்று நீரைப்பெற்று சேமித்து வைக்க வேண்டிய நிலைக்கு இம் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

குடியமர்த்தப்பட்டு ஏழு வருடங்களாகிய நிலையிலும் இக் கிராம மக்களின் அடிப்படை தேவையான குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு யாரும் முன்வில்லை.

எனவே இப் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனா. (2-266)

# பங்குனித்திங்கள் வேள்வி விழா

(கிளிநொச்சி)

குஞ்சுப்பரந்தன் பொறிக் கடவை அருள் மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தின் பங்குனித் திங்கள் வேள்வி விழா இன்று திங்கட்கிழமை இடம் பெறவுள்ளது.

இதன்படி அன்றையதினம் பகல், இரவு பூசைகள் இடம்பெற்று மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை வேள்வித் திருவிழா நடைபெறும். (2-9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்ப்பூரை தகர்க்க சதித்திட்டம் கைதான தீவிரவாதிகளிடமிருந்து தகவல்

(ஜெய்ப்பூர்)

ஜெய்ப்பூரை தகர்க்க சதி திட்டம் தீட்டியதாக கைதான தீவிரவாதிக்கு ஆப்கானிஸ்தானில் மனித வெடி குண்டு பயிற்சி அளிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாராளுமன்ற, தேர்தலையொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பு படையினர் உஷார்படுத்தப்பட்டு தீவிர சோதனை நடத்தி வருகிறார்கள். அப்போது ராஜஸ்தானில் இந்தியன் முஜாகிதீன் இயக்க தீவிரவாதிகள் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் டில்லி தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் விசாரணை நடத்தியபோது தேர்தலை சீர்குலைக்கும் நோக்கத்தில் தலைவர்களை தீர்த்துக்கட்ட சதித் திட்டத்தில் ஈடுபட்டதும், தெரிய வந்தது.

மேலும் தீவிரவாதிகளில் 2 பேர் மனித வெடிகுண்டாக மாறி தலைவர்களை பிரசாரத்தின் போது தீர்த்துக் கட்ட திட்டமிட்டு இருந்ததாகவும் வாக்குமூலம் அளித்தனர். இதையடுத்து அவர்கள் இருவரையும் ரகசிய இடத்தில் வைத்து விசாரித்து வருகிறார்கள்.

அப்போது மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது.

அதில் 2 தீவிரவாதிகளுக்கும் ஆப்கானிஸ்தானில் மனதை மாற்றி மனித வெடி குண்டாக மாற்றும் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும், ஜெய்ப்பூர் உள்ளிட்ட சுற்றுலா தலங்களை தகர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாகவும் தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து தலைவர்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (2)

# மோர்சி ஆதரவாளர்கள் இருவருக்கு மரண தண்டனை

எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி மோர்சி ஆதரவாளர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எகிப்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி முகமது மோர்சி கடந்த ஜூலை மாதம் இராணுவத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

எனவே மோர்சியின் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர். அதை தொடர்ந்து கலவரம் மூண்டது. அதில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர்.

இந் நிலையில் கலவரத்தின் போது ஒரு குழந்தை உள்ளிட்ட 2 பேர் கொல்லப்பட்டது தொடர்பாக அலெக்சாண்ட்ரியா நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் மோர்சி ஆதரவாளர்கள் 2 பேருக்கு மரண தண்டனை விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

மேலும் இந்த கலவரத்தில் ஈடுபட்ட 60 பேருக்கு தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி குமாரவேலு பூமணி

உடுவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு பூமணி கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு 55 Rue du General Leclerc, 93 370 Montfermeil, France என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சின்னத்துரை செல்லம்மா

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா றொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்லம்மா நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு 1591 Elgin Mills Rd East, Richmond Hill இல் அமைந்துள்ள Elgin Mills Crematorium இல் நடைபெறும்.



### திருமதி அந்தோனிப் பர்ணாந்து செலீனம்மா

மண்டைதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 226, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப் பர்ணாந்து செலீனம்மா கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் மண்டைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### வடிவேலு சிவநாதன்

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பை பிறப்பிடமாகவும் இங்கிலாந்து Brentford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு சிவநாதன் கடந்த 26 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 10, Burford Road. Brentford, Middlesex, TW8 OLS என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி

நாகர்கோவில் தெற்கை பிறப்பிடமாகவும், செம்பியன் பற்று தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

# தமிழர்களின் அபிலாசைகளை அரசு அடக்க முனைகிறது-வினோ எம்.பி

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணில் நிகழ்ந்தவற்றை புலம்பெயர் தமிழ் உறவுகள் நாடு நாடாக கண்விழித்து உணர்த்தி வருகின்றார்கள்.

இதன் பிரதிபலன் இலங்கை அரசுக்கு எதிராக மனிதவுரிமை பேரவையில்பிரேரணை நிறை வேற்றப்பட்டிருக்கின்றது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுவிஸ் எழுகை அமைப்பினர் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஊடாக மாற்றுவலுவுள்ள பயனாளிகளுக்கு உதவி வழங்கும் நிகழ்வு வன்னி விழிப்புலனற்றோர் சங்க பணிமனையில் நடைபெற்றது.

இதில் வினோ எம்.பி. கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உதவிகளை வழங்கி வைத்தார்.

இதன்போது அவர் அங்கு உரையாற்றுகையில்,

இன்று ஜெனீவாவரை எமது இனத்தின் பிரச்சனை போராட்டம் தெளிவாக போய் சேர்ந்திருக்கின்றது என்றால் அதற்கு காரணம் இன்று தியாகத்தின் சாட்சியாக இருக்கக்கூடிய மாற்றுவலுவுள்ளோரே.

இந்த மண்ணில் நிகழ்ந்த இரத்தமும் சதையுமான காலத்தை புலம் தமிழ் உறவுகள் நாடுநாடாக கண்விழித்து உணர்த்தி வருகின்றார்கள்.

இதன் பிரதிபலன் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மனிதவுரிமை பேரவையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

உலகம் எம் பக்கம் திரும்பியிருக்கின்றது.இந்த நிலையில் தன் கையாலாகாதனத்தை இலங்கை அரசாங்கம் மீண்டும் தமிழ் மக்கள் மீது காட்ட ஆரம்பித்திருக்கின்றது. அதன் நிலைதான் இன்று அரசாங்கம காட்டுகின்ற புலிப்பூச்சாண்டி.

இதன் மூலம் இராணுவ பிரசன்னத்தை வடக்கு கிழக்கில் அதிகரிக்கவும். உலகத்தின் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக்கொள்ளவும் அது முனைகின்றது.

ஆனால் ஒரு போதும் தர்மம் அல்ல.

அது அதன் தீர்ப்பை இந்த அரசாங்கத்தின் மீது எழுதியே தீரும். அன்றைக்கு நமது உறவுகள செய்திருக்கின்ற தியாகத்தின் வலிமை ஏற்றிப்போற்றப்படும்.

போராட்டம் என்றவுடன் ஆயுதப் போராட்டம் என்ற தவறான கருத்தை விதைத்து தமிழர்களின் அபிலாசைகளை அடக்கலாம் என அரசாங்கம் நினைக்கின்றது. ஆனால் எமது போராட்டம் ஜனநாயக வழியில் எமது இலட்சியங்களை எட்டும்வரை தொடரும்.

இப்படியான உதவிகள் மூலம் புலம்பெயர் உறவுகள் எமது மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் அதே வேளை இன்னொரு புறத்தில் புலம்பெயர்சமுகமும் நாமும் இணைந்து எமது அடிப்படை இலட்சியங்களுக்காக போராடுவதும் தொடரும் என்றார். (2)

# மக்கள் வைத்துள்ள நம்பிக்கை தேர்தல் முடிபுகளை காட்டுகிறது

## நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

ஜனாதிபதி மீதும் அரசாங்கத்தின் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையில் பாதிப்பு ஏற்படவில்லை என்பது மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் முடிபுகள் காட்டுவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முன்னெடுத்து வரும் அபிவிருத்தி செயற்பாடுகளையும் நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்லும் வேலைத்திட்டங்களுக்கும் பெரும் பலத்தை மக்கள் தேர்தல் மூலம் வழங்கியுள்ளனர்.

எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றங்களை சுமத்தி தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தாலும் அவற்றின் மூலம் அரசாங்கத்திற்கு ஆதரவான மக்களின் நிலைப்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை.

மக்களின் ஆதரவு அரசாங்கத்திற்கு இருப்பதை தேர்தல் முடிபுகள் காட்டியுள்ளன எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (2)

# வங்கதேசத்தின் தேசிய கீதத்தை 2.5 இலட்சம் பேர் பாடி உலக சாதனை

வங்கதேசத்தின் சுதந்திர தினத்தை முன்னிட்டு 2.5 இலட்சம் பேர் ஒன்றாக அந்நாட்டு தேசிய கீதத்தைப் பாடி புதிய உலக சாதனை படைத்துள்ளனர்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இருந்து வங்காளத்தைப் பிரிக்க ஆங்கிலேயர்கள் முயன்றனர்.

இறுதியில் 1947 இல் இந்தியா–பாகிஸ்தான் பிரிவினையின் போது பாகிஸ்தானுடன் கிழக்கு வங்காளம் இணைந்தது.

இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றிய நோபல் பரிசு பெற்ற இந்திய கவிஞர் ரவிந்திரநாத் தாகூர் வங்கப் பிரிவினையை எதிர்த்து அமரர் சோனார் பங்களா ஆமி தோமாயி பாலா பாஷி என்ற பாடலை இயற்றினார்.

பாகிஸ்தான் அடக்குமுறையை எதிர்த்து இந்தியாவின் உதவியுடன் போராடி 1971 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி வங்கதேசம் தனி நாடாக உருவானது.

தாகூரின் பாடல் வங்கதேச விடுதலைப் போரின் போது அந்நாட்டு தேசிய கீதமாக முதல் முறையாக பாடப்பட்டது.

தற்போது அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த ஷேக் ஹசீனா பிரதமராக இருக்கும் வங்கதேசத்தின் 43 ஆவது சுதந்திர தின விழா, சமீபத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் 2.5 இலட்சம் பேர் பங்கேற்று தேசிய கீதத்தைப் பாடி உலக சாதனை படைத்தனர்.

பிரதமர் ஷேக் ஹசீனாவும் பொது மக்களுடன் இணைந்து தேசிய கீதம் பாடினார். இந்த சாதனையை கின்னஸ் உலக சாதனை புத்தக அதிகாரிகள் கண்காணித்தனர்.

நிகழ்ச்சியில் இரண்டு இலட்சத்து 54 ஆயிரத்து 681 பேர் பாடியதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி உத்தரபிரதேசத்தின் லக்னோ நகரில் ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 653 பேர் ஒருங்கிணைந்து இந்திய தேசிய கீதத்தை பாடி உலக சாதனை படைத்துள்ளனர். (2)

# சிறுவர் சீர்திருத்த பாடசாலை கைதிகள் அறுவர் தப்பியோட்டம்

(கொழும்பு)

சிறைச்சாலை திணைக்களத்திற்கு சொந்தமான பாதுக்கையில் அமைந்துள்ள சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 கைதிகள் நேற்று காலை தப்பிச் சென்றுள்ளனர்.

சீர்திருந்த பாடசாலையில் உள்ள மருத்துவமனை கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த கம்பி வலையை வெட்டி கைதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச் சென்ற கைதிகள் 16 முதல் 22 வயதுக்கு உட்பட்டவர்கள என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தப்பிச் சென்றவர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை பாதுக்கை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.கவை வீழ்த்துமா அழகிரி வியூகம்!?



"அழகிரி, ஸ்டாலினை 38 ஆண்டுகளுக்கு முன்பே எனக்குத் தெரியும். பேச்சுலர் வாழ்க்கையில் கோபாலபுரம் ஏரியாவில் குறுக்குச் சந்து மாடி வீடு ஒன்றில் உட்கார்ந்து அரட்டையடிப்போம். தெருவில் இரண்டு மூன்று பேருடன் பேசிக்கொண்டிருந்தால்... அது ஸ்டாலின். பத்துப் பதினைந்து பேருடன் திரிந்தால்... அது அழகிரி என்று சொல்வார்கள்!" - தயாநிதி மாறனின் திருமணத்தில் இப்படி சகோதரர்களைப் பற்றி சிலாகித்தவர் ரஜினி. அப்போது ரஜினி சிலாகித்த அழகிரி - ஸ்டாலின் இடையிலான யுத்தம், இந்த நாடாளுமன்றத் தேர்தலின் திரைமறைவு மோதல்!

தி.மு.கவில் இருந்து தற்காலிகமாக விலக்கப்பட்ட அழகிரி, மன்மோகன் சிங்கை மரியாதை நிமித்தமாகச் சந்திக்கிறார். ரஜினியை மன அமைதி நிமித்தமாகச் சந்திக்கிறார். கட்சியில் இருந்து ஒதுக்கப்பட்ட தொண்டர்களைச் சந்திக்கிறார்.

அவர் தனிக் கட்சி ஆரம்பிக்கப் போகிறார் என்று ஜோஷ்யம் கிளம்புகின்றன. மறுநாள், "தி.மு.க-வையும் கலைஞரையும் காப்பாற்றுவதே என் நோக்கம்!' என்று முஷ்டி முறுக்குகிறார். "அழகிரியோடு யாரும் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது!' என்று கட்சித் தலைமை அறிக்கை விடுகிறது. "தென் தமிழகத்தில் அழகிரி, கலகக்காரர். அவரை இந்தச் சமயம் இப்படி கொம்பு சீவி விட்டிருக்கக் கூடாது.

பலமான கூட்டணிக் கட்சிகள் துணை இல்லாமல் போட்டியிடும்போது, உட்கட்சி கோஷ்டிப் பூசலும் தன் பங்கு பாதகத்தை தி.மு.க. வேட்பாளர்களுக்கு உண்டாக்கும்!' என்பது அரசியல் பார்வையாளர்களின் கணிப்பு.

"பொதுக்குழுவில் பேசும்போது, "வாய்ப்பு கிடைத்தால் தி.மு.க. தலைவர் பதவிக்கு ஸ்டாலின் பெயரை முன்மொழிவேன்!' " என கடந்த ஆண்டு தொடக்கத்தில் கருணாநிதி சொன்ன வார்த்தைகள்தான் இப்போதைய அழகிரியின் ஆவேசத்துக்கான ஆரம்பம்.

ஆனால், "அழகிரியா... ஸ்டாலினா?", "யார் அடுத்தத் தலைவர்?' என்ற வாரிசுச் சண்டை இப்போது தொடங்கியது அல்ல. 15 ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்துவிட்டது. 2000ஆம் ஆண்டு சென்னை கடற்கரையில் நடந்த முப்பெரும் விழாவில், "தி.மு.க-வின் அடுத்த வாரிசு ஸ்டாலின்' என்று சொல்லப்பட, கொந்தளித்தார் அழகிரி. "தி.மு.க-வில் இருந்தும் அரசியலில் இருந்தும் ஒதுங்குகிறேன்" என்று அதிரடியாக அழகிரி அறிவித்தார்.

அழகிரி ஆதரவு மாவட்டச் செயலாளர்கள் வேலுச்சாமி, தளபதி, மூர்த்தி ஆகிய மூவரும் முப்பெரும் விழாவைப் புறக்கணித்தார்கள். அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியதோடு, "கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய நடவடிக்கைகளிலும், கட்சித் தொண்டர்களிடையே உள்ள கட்டுக்கோப்பைக் குலைக்கும் முயற்சியிலும் அழகிரி ஈடுபட்டுள்ளார். அவருடன் தொண்டர்கள் யாரும் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது' என்றும் அறிவித்தார் பேராசிரியர் அன்பழகன்.




அவ்வளவுதான். மதுரை கொளுந்துவிட்டு எரிந்தது. பேருந்துகளை எரித்தார்கள் அழகிரியின் ஆதரவாளர்கள். கல்வீச்சு, கலவரம், ஆர்ப்பாட்டம், போராட்டம் என மதுரையே தகிக்க, சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான பொது மற்றும் தனியார் சொத்துகள் சேதம் அடைந்தன. அப்போது ஆளும் கட்சி தி.மு.க. என்பதால் காக்கிகள் கைகட்டிக்கொண்டார்கள்.

மதுரை திடீர் நகர் பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து தனது ஆதரவாளர் வட்டச் செயலாளர் முத்துவை மீட்டார் அழகிரி. அதுவரை பொலிசுடன் பார்த்தேயிராத பேராசிரியர் அன்பழகனே, காக்கிகள் புடைசூழ பாதுகாப்புடன் நடமாட வேண்டி வந்தது. மதுரை மாவட்ட தி.மு.க. நிர்வாகத்தை, பழனிவேல்ராஜனிடம் ஒப்படைத்தார்கள். நிலைமை நாளுக்கு நாள் மோசமாக, ஆற்காடு வீராசாமியும் தயாளு அம்மாளும் மதுரைக்கு வந்து சமாதானம் பேசினார்கள். ஆனாலும், அழகிரியின் கொதிப்பு அடங்கவில்லை.

தி.மு.க. என்ற கட்சி மீது அழகிரி கடுங்கோபத்தில் இருந்த அந்தச் சமயம்தான், 2001இல் தமிழகச் சட்டமன்றத்துக்குத் தேர்தல் நடந்தது. அழகிரியின் கோபம் அதில் எதிரொலித்தது. தி.மு.கவின் அதிகாரபூர்வ வேட்பாளர்களுக்கு எதிராக 12 தொகுதிகளில் "அழகிரி பேரவை' என்ற பெயரில் போட்டி வேட்பாளர்களைக் களம் இறக்கினார் அழகிரி.

அதன் காரணமாக தென் தமிழகத்தில் தி.மு.க-வின் மூத்த தலைகளே தோற்றுப் போனார்கள். வெறும் 708 வாக்குகள் வித்தியாசத்தில் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் தோல்வி அடைந்தார். தென் மாவட்டங்களில் மதுரை, இராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஓர் இடத்தில்கூட தி.மு.கவால் ஜெயிக்க முடியவில்லை. திருநெல்வேலி, விருதுநகர் மாவட்டத்தில் தலா ஓர் இடத்தில் மட்டுமே வென்றது. அதன் பின்னர் காட்சிகள் மாறின. "நடந்தது நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கும்' என்று அண்ணாவின் 'பொன்மொழியைச் சொல்லி அழகிரியைக் கட்சிக்குள் இணைத்துக்கொண்டார் கருணாநிதி.


ஆனால், அழகிரியின் அந்த "வியூகம்' இப்போது மீண்டும் ஏற்படுமா என்பதே இப்போதைய கேள்வி!

அப்போது தி.மு.க. ஆட்சியில் இருந்தது. இப்போது அ.தி.மு.க. அதனால் அழகிரி கொஞ்சம் அடக்கி வாசிக்கலாம்.

ஆனால், ஜெயா டி.வி-யில் அழகிரி தொடர்பான செய்திகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் மூலம் அவருக்கு ஆளும் கட்சியின் மறைமுக ஆதரவு இருப்பதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன.

"அழகிரியின் கோபத்தை தன் கட்சிக்கு அறுவடை செய்து கொள்ள நினைக்கும் அ.தி.மு.க. அதனாலேயே தயா பார்க், கிரானைட் மோசடி வழக்குகளில் அழகிரியின் மகன் துரை தயாநிதியை பொலிஸ் இன்னும் விசாரணை செய்யவில்லை. அமைச்சராக இல்லாத அழகிரிக்கு இப்போதும் லோக்கல் காக்கிகளின் பாதுகாப்பு தொடர்கிறது.

இதெல்லாம் ஆளும் கட்சியின் ஆசீர்வாதம் என்று எங்களுக்குப் புரியாதா என்ன?' என்று முணுமுணுக்கிறார்கள் தி.மு.கவின் சீனியர்கள். தினமும் சலசலப்பு கிளம்பும் விதத்தில் அழகிரியின் செயற்பாடு இருக்க வேண்டும் என்பது ஆளும் கட்சித் தரப்பின் எதிர்பார்ப்பு.



அதற்கு ஏற்பவே ரஜினியுடன் சந்திப்பு, தொண்டர்களுடன் மீட்டிங் என ஃப்ளாஷ் அடித்துக் கொண்டே இருக்கிறார் அழகிரி.

மதுரை, சிவகங்கை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திண்டுக்கல் என தென் மாவட்ட பெல்ட்டில் 10 எம்.பி. தொகுதிகள் அடக்கம். இந்த 10 தொகுதிகளிலும் கடந்த 2009 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியே ஒன்பதை வென்றது.

அதிலும் பத்தில் ஆறு தொகுதிகளில் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர்களால் ஒன்றில்கூட வெற்றி பெற முடியவில்லை. அ.தி.மு.கவின் கோட்டை என கருதப்பட்ட தேனி, திண்டுக்கல். தொகுதிகளும் அதில் அடக்கம். உச்சகட்டமாக விருதுநகரில் அ.தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட வைகோ தோல்வி அடைந்தார். தென்காசியில் மட்டும் இந்திய கம்யூனிஸ்ட் வென்றது. அந்த 10 தொகுதிகளில் 9ல் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறக் காரணமாக இருந்தது அழகிரிதான் என்பது அவரது ஆதரவாளர்களின் வாதம்!

இப்போது அந்த வியூகத்தை அப்படியே புரட்டிப் போட்டு அறிவாலயத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் தர நினைக்கிறார் அழகிரி. அதன் வெளிப்பாடுதான் தேனி எம்.பி. ஆரூண் ரஷீத்தைச் சந்தித்திருக்கிறார். இந்த முறை வைகோவை ஜெயிக்க வைக்க முடிவெடுத்திருக்கிறார். விமானப் பயணத்தில் வைகோவைச் சந்தித்த அழகிரி, "உங்கள் மீது பழி சுமத்தியது போல என் மீதும் பழி சுமத்தியிருக்கிறார்கள்' என்று பொருமலாக பல விடயங்களைப் பேசியிருக்கிறார்.

விருதுநகரில் கே.கே.எஸ். எஸ்.ஆர்., திருநெல்வேலியில் கருப்பசாமி பாண்டியன், திண்டுக்கல்லில் ஐ.பெரியசாமி, சிவகங்கையில் பெரியகருப்பன், தூத்துக்குடியில் என்.பெரியசாமி ஆகியோர் ஸ்டாலின் ஆதரவாளர்களாக இருந்தபோதும், அவர்களை தன் ஆளுகையை மீறாமல் பார்த்துக்கொண்டவர் அழகிரி. ஆனால், இப்போது அவர்களின் சிபாரிசில் ஸ்டாலின் ஆதரவாளர்களாக களமிறங்கி இருக்கும் 9 தி.மு.க. வேட்பாளர்களையும் (தென்காசி கூட்டணிக்குப் போய்விட்டது) வீழ்த்த குறி வைத்துவிட்டார். பி.ஜே.பி. கூட்டணி, அ.தி.மு.க. ஆளுமை... இவற்றுக்குச் சமமாக "அழகிரி அலை'யையும் உஷாராக எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது தி.மு.க.!

"கருணாநிதிக்கு, இரண்டு மிகப் பெரிய சொத்துகள் உள்ளன. ஒன்று தி.மு.க. இன்னொன்று அவரது மகன்களான அழகிரியும் ஸ்டாலினும். தி.மு.க-வை அழகிரியும் ஸ்டாலினும், இவர்களை தி.மு.க-வும் காக்க வேண்டும்!" என்று ஒருமுறை ரஜினி சொன்ன வார்த்தைகள் பலிக்காமல் போய்விடுமோ?

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டு தடிகள் பொல்லு கொண்டுவருதல் கண்டால்
பெண்டில் பின்னால் நின்று சண்டித்தனங்கள்
பேசும் வீராதி சூரர் நாமல்லோ.
– வசந்தன் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அன்று கதிர்காமம் சென்று பாவம் அழித்தோம் இன்று ஜெனிவா சென்று பாவம் உழைத்தோம்

மக்காவுக்கு சென்று வந்தால் ஹாஜியார் என்ற பட்டம் சூட்டப்படுவது இஸ்லாமியத்தின் மரபு. அந்தளவுக்கு மக்காவின் புனிதம் போற்றப்படுகின்றது.

இவ்வாறாக புனித தலங்களுக்குச் சென்று வருபவர்களைப் புண்ணியவான்களாகப் போற்றுகின்ற மரபு அனைத்துச் சமயங்களிலும் இருக்கவே செய்கின்றன.

முன்பெல்லாம் நம்மவர்கள் கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை செல்வது வழக்கம். முருகா என்ற நாமத்தின் உச்சாடனத்தோடு நடந்து சென்று கதிர்காமக் கந்தனைத் தரிசித்து வருவர். சுமார் மூன்று மாதகாலம் தொடர்ச்சியான நடைப் பயணம் கதிர்காம யாத்திரைக்கு சிறப்பாயிற்று.

இவ்வாறு பாதயாத்திரையாக கதிர்காமத்துக்கு சென்று வந்தவர்களைக் கண்டு வணங்குவது, அவர் கையால் திருநீற்றுப் பிரசாதம் பெற்று அணிவது என்பன பெரும் பேறாகக் கருதப்பட்டது.

கூடவே, கதிர்காம யாத்திரையின் போது நடந்த அற்புதங்களையும் அவர்கள் சொல்லக் கேட்டு கண்ணீர் மல்கி, கதிர்காமக் கந்தனை வந்தனை செய்கின்ற நடைமுறை எங்களிடம் இருந்தது.

இவ்வாறாக கதிர்காமத்துக்கு பாதயாத்திரை சென்று வருபவர்களின் உடல்நிலையும் ஆரோக்கியமாகவே இருந்தது.

சுமார் மூன்று மாதங்கள் நடைப்பயணம் என்றால் சலரோகம், உயர்குருதி அழுத்தம் என்ற நோய்களுக்கு ஏது இடம்?

இப்போதெல்லாம் அந்த நடைமுறைகள் இல்லாமல் போய் சலரோகம், உயர்குருதி அழுத்தம் என்பன எல்லோரதும் சொத்தாகி விட்டது.

இருந்தும் சிலர் கடற்கரைப் பக்கமாக காலை, மாலை நடைப்பயிற்சியில் ஈடுபடுவர். இவர்களைப் பார்க்கும் போது முற்பிறப்பில் கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை செய்தவர்களாக இருப்பார்களோ என்று நம் சிற்றறிவு சிந்திப்பதுண்டு.

காலை, மாலை கடற்கரை ஓரமாக நடப்பவர்கள் தங்களுக்கு பிடித்தமான கோயில்களுக்கு நடந்து சென்று வழிபாடாற்றினால் புண்ணியமாக இருக்குமே என்று நாம் நினைப்பதுமுண்டு.

இந்த நினைப்புக்களை இவ்விடத்தில் கூற வந்ததற்குக் காரணம், ஒரு காலத்தில் கதிர்காம பாதயாத்திரை சென்று பாவம் போக்கிய நம் இனத்தில், இப்போது ஜெனிவா சென்று பாவம் சேர்க்கின்ற தமிழ் அரசியல் தலைமைகளின் கபடத்தனமேயாகும்.

ஆம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் என்பது அமெரிக்க இராஜதந்திரிகளால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட விடயமாகும். திருத்தங்கள் கூட, ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவைகள்தான்.

ஆனால், நம் அரசியல்வாதிகள் ஜெனிவாத் தீர்மானம் அரங்கேறும் போது ஜெனிவாவுக்குச் சென்று ஏதோ தங்களால்தான் தீர்மானம் நிறைவேறுவதுபோல காட்டாப்புக் காட்டுவர்.

அந்தக் காட்டாப்பு முற்றிப் பழுத்து தேர்தல் காலங்களில் உச்சமான பிரசாரப் பழுச்சாறாகும்.

என்ன செய்வது? ஜெனிவா சென்று வந்தால், நாங்களும் அவர்களுக்குக் ஹாஜியார் பட்டம் கொடுத்து விடுகின்றோம்.

ஜெனிவாவில் அவர்க஧் செய்தது என்ன? யாருக்காக அவர்கள் பாடுபட்டனர்? அவர்கள் எவருக்கு என்னென்ன உத்தரவாதம் வழங்கினர்? என்பதுபற்றியெல்லாம் நாம் சிந்தித்துப் பார்ப்பதேயில்லை. அதனால் அவர்களின் கபடத்தனம் வெற்றியளிக்கவே செய்கிறது.

# ஈழத்தமிழர்கள் வாழ்வில் இந்தியா மாற்றத்தை ஏற்படுத்தும்

## அகில இலங்கை இந்துமா மன்றம் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜெனிவா அமர்வின்போது இலங்கைக்கெதிரான தீர்மானத்தின் வாக்கெடுப்பில் பங்குபற்றாது இந்தியா நடுநிலைமை வகித்தது ஏன் என்று வாய்விட்டு சொல்லுமாறு நாம் கேட்க முடியாது. இந்தியாவின் அந்த முடிவிற்குள் இராஜதந்திரம் உள்ளது என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார்.

300 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடம் மற்றும் கீரிமலை சிவபூமி அரங்கம், சிவபூமி கலைக் களஞ்சியம் உள்ளிட்ட இரண்டு மாடிக் கட்டடம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும்தெரிவிக்கையில்,

ஐ.நா அமர்வில் இந்தியா ஏன் இவ்வாறு செய்தது என்று எம்மால் ஊகிக்க முடியும். அடுத்த இரண்டு மாதத்திற்குள வடக்கு மாகாண சபை சுதந்திரமாக இயங்கும். அதற்கு இந்தியா உதவும் என்ற நம்பிக்கையுள்ளது. இந்தியா தான மாகாண சபைத் தேர்தலை வடக்கிற்கு நடத்தியது. அதேபோன்று வடக்கு மாகாண சபை சிறப்பாக இயங்க நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் வாழ்வில் இந்தியா மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பக்கையுள்ளது. இந்தியா எமக்கு நல்ல வழிகாட்டும்.

இந்தியா எடுக்கும் முடிவுகள் எமக்கு நன்மை பயப்பதாகவே அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் உரையாற்றும் போது,

ஐக்கிய நாடுகள் சபையின் 25 ஆவது அமர்வில் இலங்கை அரசிற்கெதிராக மூன்றாவது முறையாக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் வாக்கெடுப்பின் போது இந்தியா நடுநிலையாகவேயிருந்தது. கடந்த மூன்று தினங்களாக ஈழத்தமிழர்கள் மிகவும் வருத்தமாகயிருப்பதாக கேள்விப்பட்டேன். பலர் எனக்கும் நான் பலருக்கும் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்திய போதும் தமது கவலையை வெளியிட்டிருந்தனர்.

நண்பர்களே! நடுநிலையென்பது நழுவிவிட்டதாக அர்த்தமல்ல. இந்தியா தொடர்ந்தும் ஈழத்தமிழர்களுக்காக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஒரு நல்ல நிலையை நோக்கிசெல்ல உதவும் அதற்காக பாடுபடும், நீரடித்து நீர் விலகாது என்றும் இந்தியா உங்களுடன் தான் இருக்கும் என்பதை புரிந்து கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-6)

## சட்டவிரோத மணல் அகழ்வு; உழவு இயந்திர சாரதி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொடிகாமம், கெற்போலி பகுதியில் உழவு இயந்திரத்தில் சட்ட விரோதமாக மணல் அகழ்ந்து கொண்டு செல்ல முற்பட்டவரின் உழவு இயந்திரச் சில்லுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன், சந்தேகத்தின் பேரில் உழவு இயந்திரச்சாரதியைக் கைது செய்ததாகவும் கொடிகாமம்பொலிஸார்தெரிவித்தனர்.

இச்சம்பவத்தின்போது உழவு இயந்திரச சாரதி உழவு இயந்திரத்தி லிருந்து கீழே விழுந்து காயமடைந்ததாகவும்பொலிஸார்கூறினர்.

அத்துடன், குறித்த உழவு இயந்திரத்தை கைப்பற்றிய பொலிஸார்அதனை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த பிரஸ்தாப சந்தேக நபர், பொலிஸார் அவ்விடத்திற்கு வருவதைக் கண்டு உழவு இயந்திரத்துடன் தப்பியோட முயன்றுள்ளார். இதன்போது, பொலிஸார் துப்பாக்கியினால் மேல் நோக்கி வெடிவைத்தனர். இருப்பினும், சந்தேக நபர் தொடர்ந்து உழவு இயந்திரத்துடன் தப்பியோடிய நிலையில் குறித்த உழவு இயந்திரத்தின் சில்லுக்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-6)

## சைக்கிள் ஓட்டப் போட்டியில் இராணுவ வீரர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட இராணுவ வீரரின் சைக்கிளும் மோட்டார் சைக்கிளொன்றும் நேருக்கு நேர் மோதியதால் படுகாயமடைந்த இராணுவ வீரர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.வேம்படிச் சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்தில் பலாலி படைத் தலைமையகத்தைச் சேர்ந்த ஏ.எஸ். கலுவில (வயது 20) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சைக்கிள் ஓட்டப் போட்டியானது கட்டுவனிலிருந்து ஆரம்பமாகி பலாலி வீதி வழியாக யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கைச் சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அன்பும் கருணையும்



இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும்தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம். அன்பு என்பது எந்த ஒன்றையும் உடலாலோ மனத்தாலோ தன்னோடு இணைத்துப்பிடித்துக் கொண்டிருப்பது. அப்படி இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை.

ஒரு முட்டையைப் பாருங்கள். அதிலுள்ள அனைத்துப் பொருட்களையும் ஒன்றிணைத்து அதன் ஓடு பிடித்துக் கொண்டிருக்கிறது. இது போன்றது அன்பு. முட்டைக்குள்ளிருக்கும் மஞ்சட்கருதான் குஞ்சுவாக உருவாக இருக்கிறது. அந்த மஞ்சட்கருவுக்கு அதனைச் சுற்றியுள்ள வெள்ளைக்கரு தேவையான எல்லாப்பொருட்களையும் அளித்து நலமளிக்கிறது. இது போன்றது கருணை.

ஒரு மாமரத்தில் பிஞ்சு விடுகிறது. அதனைச் சிறுகாம்பின் மூலம் விழுந்து விடாமல் மரமானது பிடித்துக்கொண்டிருக்கின்றது. இது அன்பு. அவ்வாறு பிடித்துக் கொண்டே பிஞ்சு வளர்வதற்குத் தேவையான இரசாயன நீரை அந்த மரம் பாய்ச்சிக் கொண்டேயிருக்கிறது. அதுதான் கருணை.

உயிரினங்களில் ஒரு குழந்தையைப் பெற்ற தாய் அதனை எப்போதும் தன்னோடு இணைத்துப்பிடித்துக்கொண்டோ அல்லது அது பிரிந்து போய் விடாமல் கண்காணித்துக்கொண்டோ இருக்கிறாள். இது அன்பு. அதேகாலத்தில் அந்தக் குழந்தை வளர்வதற்கும் வாழ்வதற்கும் தேவையான பால், உணவு இவைகளை அது வளர்ச்சி பெறும் வரையில் ஊட்டிககொண்டே இருக்கிறாள். இதுதான் கருணை.

## ஊழலுக்கு இடமில்லை

எமது பிரதேசத்தில் ஊழலுக்கு இடம் கொடுக்கப்போவதில்லை என வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்வி, கலாசார. அபிவிருத்தி நிதியத்தின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

கல்வி அபிவிருத்தி என்பது எமது பிரதேசத்தில் பெரும் சவாலாக உள்ளது. எனினும் அதற்கு உதவுவதற்கு நாம் தயாராக உள்ளோம். அவ்வேளையில் நாம் உதவும்போது இப்பிரதேச அதிபர்கள் பெரிய தூணாக இருத்தல் வேண்டும்.

வறுமையை காரணம் காட்டி கல்வியை இடைநடுவில் விடுவதை எமது பிரதேசத்தில் நாம் அனுமதிக்கப்போவதில்லை. அதற்காக நாம் நிறுவனங்களின் உதவியை நாடுகின்றோம். அதனூடாக வறுமையை விரட்டியடிப்போம்.

நிறுவனங்களின் ஊடாக வறுமைக்கான காரணத்தை இனம்கண்டு அதனை இப் பிரதேசத்தில் இருந்துகளைய வேண்டும். இதற்கு அனைவரும் இன, மத, பேதமின்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கோருகின்றேன்.

இந்நிலையில்எமது பிரதேசத்தில் ஊழலுக்கு இடம் கொடுக்கப்போவதில்லை. அதனை அனைவரும் விளங்கி செயற்பட வேண்டும்.

புலம்பெயர்ந்தவர்கள் தமது பிறந்த நாளுக்காகவும் ஏனைய நிகழ்வுகளுக்காகவும் செலவிடும் பணத்தில் ஒரு பகுதியை எமது பிரதேசத்தில் கல்வி, கலாசார. அபிவிருத்திக்கு எனது நிதியத்தினூடாக பயன்படுத்துங்கள். அப் பணத்தில் நாம் வறுமைப்பட்ட மாணவர்களுக்கு சோறூட்டி கல்வியும் ஊட்ட தயாராக உள்ளோம் என தெரிவித்தார்.(2-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சென்றலை வீழ்த்தி ஜோனியன்ஸ் வெற்றி



(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ். மாவட்டத்தில் அழைக்கப்பட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் நடத்தி வரும் 50 பந்துபரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் ஜோனியன்ஸ் அணி 5 இலக்குகளால் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற போட்டியில் யாழ். சென்றல் அணியினை எதிர்த்து ஜோனியன்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் அணி 39 பந்து பரிமாற்றங்களில் 174 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் எஸ்.சலிஸ்ரன் 31, என்.யசிந்தன் 28, எஸ்.றொகான் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் ஜோனியன்ஸ் அணி சார்பாக எஸ்.அகிலன் 4 (24), பி.லவேந்திரா 3 (27) இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

தொடர்ந்து 175 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜோனியன்ஸ். அணி 37.5 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஏ.ரஜிந்தன் 52, பி.லவேந்திரா 29, எஸ்.அம்புஜன் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றல் அணி சார்பாக எஸ்.சுபதீஸ் 2 (30) இலக்குகளைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ஜோனியன்ஸ் அணியினைச் சேர்ந்த பி.லவேந்திரா (3 இலக்குகள், 29 ஓட்டங்கள்) தெரிவு செய்யப்பட்டார். (க-23)

## ஹொக்கிப் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரியில்

இலங்கை பாடசாலை ஹொக்கிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் ஹொக்கிச் சுற்றுப்போட்டி இவ்வருடம் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிக்னெல் மைதானத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் இணைப்பாளர் பிரான்சிஸ் சந்திரன் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஹொக்கி அணிகளுக்கிடையேயான இப்போட்டிகள்ஏப்ரல்மாதம்2ஆம்திகதி ஆரம்பமாகி 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-23)

# சர்வதேசக் கிரிக்கெட் பேரவைக்கு இந்திய பிரதிநிதியாக ஸ்ரீநிவாசன்



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் பதவியில் இருந்து நீதிமன்ற உத்தரவின் பேரில் பதவி நீக்கப்பட்ட ஸ்ரீநிவாசன் சர்வதேசக் கிரிக்கெட் பேரவைக்கான இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் பிரதிநிதியாக தொடர்ந்தும் செயற்படுவார் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

நீதிமன்றம் இதனை உறுதி செய்துள்ளது. நீதிமன்ற உத்தரவில் இந்தியன் சிமெண்ட் நிறுவன ஊழியர்கள் எவரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையில் அங்கம் வகிக்க கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும் சர்வதேசக் கிரிக்கெட் பேரவையில் அங்கம் வகிக்க கூடாது என கூறவில்லை.

ஸ்ரீநிவாசனின் கடின உழைப்பே இந்திய கிரிக்கெட்டின் ஆதிக்கத்தை சர்வதேசக் கிரிக்கெட் பேரவையில் உயர்த்தியது.

எனவே அவர் தொடர்ந்தும் சர்வதேசக் கிரிக்கெட் பேரவையில் அங்கம் வகிக்க வேண்டும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செயலாளர் சஞ்சய் பட்டேல் இந்திய பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

சர்வதேசக் கிரிக்கெட் பேரவை இந்த விடயம் தொடர்பில் இதுவரை கருத்துகள் எதனையும் தெரிவிக்காமல் மௌனம் சாதித்து வருகின்றது.

சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் விதிகளின் படி, சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் தலைவராக பொறுப்பு ஏற்க வேண்டும் எனில் சபை ஒன்றின் தலைவராக இருக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. பிரதி நிதியாக அவர் இருந்தால் போதும்.

எனவே ஸ்ரீநிவாசன் சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் தலைவராக பொறுப்பு ஏற்பதில் தடைகள் இருக்காது. இந்த நிலையில் ஏப்ரல் மாதம் 9 , 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் கூட்டத்தில் பங்குபற்றுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதத்தில் இந்தப் பதவியை ஸ்ரீநிவாசன் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யுத் சைக்கிள் சவாரி

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம், இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சு ஒன்றிணைந்து தேசிய ரீதியான "ஸ்ரீலங்கா யுத் சைக்கிள் சவாரி" சைக்கிளோட்டப் போட்டியை நடத்தவுள்ளது.

மே மாதம் 6,7,8,9ஆம் திகதிகளில் இலங்கையில் இடம்பெறவுள்ள உலக இளைஞர் மாநாட்டிற்கு இணைவாக, அதனை முன்னிட்டே இச் சைக்கிளோட்டப் போட்டி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி (புதன்கிழமை) யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து ஆரம்பமாகும் போட்டிகள் 5 கட்டங்களாக இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகும் போட்டிகள் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திற்கு அருகில் நிறைவு பெறவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி காலை 8.30க்கு மதவாச்சியில் ஆரம்பிக்கும் போட்டிகள் வாரியபொலவில் நிறைவு பெறும்.

எதிர்வரும் 4ஆம் திகதி காலை 8.30க்கு குருநாகல் மாளிகாப்பிட்டி விளையாட்டரங்கில் ஆரம்பிக்கும் போட்டிகள் அவிசாவளை நகரில் நிறைவு பெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி காலை 8.30க்கு இரத்தினபுரி சீவலி விளையாட்டரங்கில் ஆரம்பிக்கும் போட்டிகள் மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் நிறைவுபெறும்.

எதிர்வரும் 6ஆம் திகதி காலை 8.30க்கு மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் ஆரம்பிக்கும் போட்டிகள் மகரகம ஸ்ரீலங்கா யூத் மத்திய நிலையத்தில் நிறைவடையவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் போட்டியினை வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார். (க-23)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# விருது வழங்கி கௌரவம்

(மல்லாகம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அண்மையில் கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் வெற்றியீட்டிய அருணோதயக் கல்லூரி மாணவி அருந்தவம் பவித்திராவுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தார். (க-21)





வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது கல்லூரியின் அதிபர் எம்.எஸ். பத்மநாதன் தலைமையில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் முதலிடம் வென்ற கம்பன் இல்லத்தின் தலைவரிடம் சம்பியன் கேடயத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அணி அபார வெற்றி

## தீர்மானமிக்க போட்டியில் நாளை மேற்கிந்தியத் தீவுகளுடன் மோதுகிறது

### செஷாட் அதிரடிச் சதம்



அஹமட் ஷெசாட்டின் அதிரடிச் சதம் கைகொடுக்க பங்களாதேஷ் அணிக்கு எதிரான உலக இருபது-20 போட்டியில் பாகிஸ்தான் அணி 50 ஓட்டங்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

5-வது இருபது-20 உலகக் கிண்ணப் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதன் 'சுப்பர் 10' போட்டியில் குரூப் 2ஐ சேர்ந்த பங்களாதேஷ் - பாகிஸ்தான் அணிகள் நேற்று மிர்பூரில் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு அஹமட் செஷாட் - கம்ரன் அக்மல் ஜோடி அதிரடி ஆரம்பம் வழங்கியது.

இவர்கள் இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 4.3 ஓவர்களில் 43 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்தபோது கம்ரன் அக்மல் 9 ஓட்டங்களுடன் ரஹ்மானின் சிறப்பான பிடியெடுப்பினால் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து துடுப்பாட வந்த அணித் தலைவர் ஹபீஸ் 8, கடந்த போட்டியின் வெற்றி நாயகன் உமர் அக்மல் 0 என விரைவாக வெளியேறினர்.

இதன்போது பாகிஸ்தான் அணி 9.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன்பின் களமிறங்கிய சொகைப் மலிக்., களத்தில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த செஷாட்டுக்கு சிறப்பான ஒத்துழைப்பை வழங்கினார்.

இவர்களில் செஷாட் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க, மலிக் நிதானமாக ஆடிக் கொண்டிருந்தார்.

இவ் ஜோடி 4-வது விக்கெட்டுக்காக தமக்கிடையில் 85 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்த போது மலிக் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய செஷாட் அணியின் ஓட்ட எண்ணிக்கை 156ஐ எட்டியபோது இருபது-20 போட்டியில் தனது கன்னிச் சதத்தை பதிவு செய்தார். இவர் அடித்த இச் சதமானது பாகிஸ்தானிய வீரர் ஒருவர் இருபது - 20 போட்டிகளில் அடித்த முதல் சதமானது.



இவரின் சிறப்பான ஆட்டமும், சஹிட் அப்ரிடியின் அதிரடியும் பாகிஸ்தான் அணியின் இன்னிங்ஸை நிறைவுக்கு கொண்டுவர பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் செஷாட் ஆட்டமிழக்காமல் 62 பந்துகளில் 111, சஹிட் அப்ரிடி 9 பந்துகளில் 22 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அப்துர் ரஷாக் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

20 ஓவர்களில் 191 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது.

இதன் காரணமாக பங்களாதேஷ் அணியால் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் அதிகபட்சமாக ஷகீப் அல் ஹசன் 38 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர் குல் 3, சஜீட் அஜ்மல் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக பாகிஸ்தான் அணியின் செஷாட் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி தனது அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டதுடன், குரூப் 2 இலிருந்து அரையிறுதிக்குத் தெரிவாகும் அணியைத் தீர்மானிக்கும் போட்டியில் நாளை மேற்கிந்தியத் தீவுகளுடன் மோதுகின்றது.

# அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது இந்தியா



## யுவராஜ், அஷ்வின் அசத்தல்

யுவராஜ் சிங்கின் அதிரடி அரைச்சதமும், இந்திய வீரர்களின் அசத்தலான பந்துவீச்சும் கைகொடுக்க அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது-20 உலகக் கிண்ண லீக் போட்டியில் இந்திய அணி 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவான வெற்றியை பெற்றது.

பங்களாதேஷில் 5-வது இருபது-20 உலகக் கிண்ண தொடர் நடக்கிறது. இதன் 'சுப்பர் 10" சுற்றில் குரூப் 2ஐ சேர்ந்த இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் நேற்று மிர்பூரில் மோதின.

ஏற்கெனவே அரையிறுதிக்கு முன்னேறிய இந்திய அணி, அவுஸ்திரேலியாவை சந்தித்தது. இந்திய அணியில் ஷிகர் தவான், மொஹமட் ஷமி நீக்கப்பட்டு ரகானே, மோகித் சர்மா சேர்க்கப்பட்டனர். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

**யுவராஜ் அபாரம்:**

இந்திய அணிக்கு ரோகித் சர்மா (5) மோசமான ஆரம்பம் கொடுத்தார். விராட் ஹோலி (23), ரஹானே (19) நிலைக்கவில்லை. ரெய்னா (6) ஏமாற்றினார். பின் இணைந்த யுவராஜ் சிங், அணித் தலைவர் தோனி அசத்தினர். மூர்ஹெட் வீசிய 14-வது ஓவரில் அடுத்தடுத்து 2 சிக்ஸர்கள் அடித்த யுவராஜ், ஸ்ரார்க் வீசிய 17-வது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் விளாசினார். வோட்சன் பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய யுவராஜ், சர்வதேச இருபது-20 அரங்கில் தனது 8-வது அரைசதத்தை பதிவு செய்தார். ஐந்தாவது விக்கெட்டுக்கு இவ்ஜோடி 84 ஓட்டங்கள் சேர்த்த போது, ஸ்ரார்க் வேகத்தில் தோனி (24) போல்டானார். பொறுப்பாக ஆடிய யுவராஜ் 43 பந்துகளில் 60 ஓட்டங்கள் (4 சிக்சர், 5 பவுண்டரி) எடுத்தபோது வோட்சன் பந்தில் ஆட்டமிழந்தார். ஜடேஜா (3) 'ரன் அவுட்' ஆனார். 20 ஓவர்களில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணி, அஷ்வின் சுழலில் சிதறியது. பின்ஞ் (6), வைட் (0), வோட்சன் (1) ஏமாற்றினர். வோர்னர் (19), மக்ஸ்வெல் (23) நிலைக்கவில்லை. அணித் தலைவர் ஜோர்ஜ் பெய்லி (8), ஹடின் (6) சொதப்பினர். ஸ்ரார்க் (2) ரன்அவுட் ஆனார். ஹொட்ஜ் (13), மூர்ஹெட் (3) ஏமாற்றினர்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி 16.2 ஓவர்களில் 86 ஓட்டங்களுடன் சுருண்டது.

இந்தியா சார்பில் அஷ்வின் 4, அமித் மிஸ்ரா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக அஷ்வின் தெரிவானார்.

இத்தொடரில் ஏற்கெனவே பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகளை வென்ற இந்திய அணி நேற்று நான்காவது வெற்றியை பதிவு செய்தது.



# அரையிறுதி வாய்ப்பு

## இலங்கை-நியூசிலாந்து இன்று மோதல்



20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிகளில் 'குரூப் 1' இல் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, இலங்கை, நியூசிலாந்து, நெதர்லாந்து ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

இக் குழுவில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெறும். இக்குழுவில் இடம்பெற்றுள்ள தென்னாபிரிக்க அணி 3 வெற்றிகள், ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று அரையிறுதிக்கு ஏற்கெனவே தகுதி பெற்றுவிட்டது.

இங்கிலாந்து அணி ஒரு வெற்றி 2 தோல்விகளுடன் 2 புள்ளிகளும், நெதர்லாந்து அணி 3 போட்டிகளிலும் தோற்று புள்ளி எதுவும் பெறவில்லை என்பதுடன் இந்த இரண்டு அணிகளும் அரையிறுதி வாய்ப்பை ஏற்கெனவே இழந்துவிட்டன.

இந்த பிரிவிலிருந்து அரையிறுதிக்கு நுழையும் மற்றொரு அணி எது என்பதற்கான போட்டியில் இலங்கை - நியூசிலாந்து அணிகள் இன்று பலபரீட்சை நடத்துகின்றன. இரு அணிகளும் 2 வெற்றிகள், ஒரு தோல்வியுடன் தலா 4 புள்ளிகளை பெற்றுள்ளன.

இதில் வெற்றி பெறும் அணி அரையிறுதிக்கு தகுதி பெறும் என்பதால் இரு அணிகளுமே வெற்றிக்காக கடுமையாக போராடும். இரு அணிகளிலும் தலைசிறந்த வீரர்கள் இருப்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும்.

20 ஓவர் போட்டிகளில் இலங்கை - நியூசிலாந்து அணிகள் இதுவரை 12 தடவைகள் மோதியுள்ளன. இதில் இரு அணிகளும் தலா 5 வெற்றிகள் பெற்றுள்ளதுடன் ஒரு ஆட்டம் 'டை' ஆனதுடன் ஒரு ஆட்டத்துக்கு முடிவு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ சுற்றி...

புகளும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரின் கைது நடவடிக்கைகளும் பொலிஸாரின் விசாரணைகளும் அதிகரித்துள்ள நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கை குழப்பமடைந்துள்ளது.

பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் தேடப்பட்டுவரும் நபர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் வடக்கில் பலர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தேடப்பட்டுவரும் நபர்கள் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை கிழித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வடமராட்சி பகுதியில் நேற்றைய தினம் பெருமளவான இராணுவத்தினர் ஆயுதங்களுடன் சுற்றிவளைப்பில் ஈடுபட்டதாகவும் பலரிடம் இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் குருநகர்ப்பகுதியில் இராணுவமும் பொலிஸாரும் இணைந்து நேற்று காலை சுற்றி வளைப்பு ஒன்றினை மேற் கொண்டிருந்தனர்.

அதன்படி குருநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஆயுதங்கள் மற்றும் கஞ்சா வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இராணுவத் தினரும் பொலிஸாரும் இணைந்து இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கையினையும் தேடுதல் நடவடிக்கையினையும் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் அங்கு ஆயுதங்களோ அல்லது கஞ்சாவோ மீட்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

குருநகர்பகுதியில் உள்ள இரண்டு குடும்பங்களுக்கு இடையில் நேற்று கருத்து வேறுபாடு ஏற்பட்டு மோதல் நிலையினை அடைந்திருந்தது. அதனையடுத்து ஒரு பகுதியினரால் குறித்த வீட்டில் ஆயுதங்களும் கஞ்சாவும் இருப்பதாக தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனாலேயே இந்தச் சுற்றிவளைப்பும் தேடுதலும் இடம்பெற்றுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6,24)


### ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் (O/L), (A/L) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : M.Rajan -0772286054 (6012)


## அரசுக்கு மக்கள்...

பாடத்தை கற்றுக்கொடுத்துள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸ்ஸநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் சட்டவிரோத செயல்களுக்கு சிறந்த பாடத்தை மக்கள் கற்பித்துள்ளனர்.

அரசாங்கம் தனது அரசியல் திட்டத்திற்கு அமைய ஜெனிவா பிரச்சினையை தனக்கு சாதகமாக பயன்படுத்த முயற்சித்த போதிலும் அது தோல்வியடைந்துள்ளது.

கொழும்பு மாவட்ட மக்களில் 55 வீதமானவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

தென் மாகாணத்தில் அரசாங்கத்தின் வாக்கு வங்கி 9 வீதமாக குறைவடைந்துள்ளது.

அம்பாந்தோட்டையில் அதிகளவான ஆசனங்களை அரசாங்கம் கைப்பற்ற் தாலும் வாக்கு வீதம் குறைந்துள்ளத அனுரகுமார திஸ்ஸநாயக்க மே தெரிவித்துள்ளார். (செ-11)

## இலங்கை மீது...

கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் சுயாதீன விசாரணைகளை இலங்கை ஜனாதிபதி நிராகாரித்தமை அதிர்ச்சியளிக்கும் வகையில் அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## கடற்பரப்பில்...

நடைமுறையை இராணுவத்தினர் தற்போது திடீரென அமுல்படுத்துவதற்கான காரணம் தெரியாமலும் அவர்கள் திகைத்துப்போயுள்ளனர்.

ஒருபுறம் இந்திய மீனவர்களின் ரோலர் பட்குகள் மறுபுறம் சீனாவின் அதிநவீன படகுகளின் அத்துமீறல்களினாலும் கடல் வளத்துடன் தமது வாழ்வாதாரமும் சுரண்டப்படுவதாக வடமராட்சி பகுதியுட்பட வடபகுதி மீனவர்கள் குற்றம் சாட்டிவரும் நிலையில் இராணுவத்தினரின் மேற்படி உத்தரவு மீனவர்களின் வாழ்வில் பெரும் இடியாக பாய்ந்துள்ளது.

அத்தோடு இராணுவத்தினரின் பாஸ் நடைமுறை தற்போது தேவையற்றது எனவும் சுதந்திரமாக தொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் வடமராட்சிப் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை நேற்றைய தினம் வடமராட்சிப் பகுதியிலுள்ள மீனவர் சங்கங்களுக்கு சென்ற இராணுவத்தினர் இந்த உத்தரவை இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் இதற்கு சகல மீனவர்களும் உடன்பட்டுத்தான் ஆக வேண்டுமெனவும் கண்டிப்பான உத்தரவை போட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6-24)


### காணி விற்பனைக்குண்டு

முதலியார் கோவிலடி, கரணவாய் தெற்கு, கரணவாய் என்னும் முகவரியில் உள்ள 21/4 பரப்பு காணி ஒன்று விற்பனைக்கு உள்ளது.

பிரதான ஒழுங்கையில் இருந்து இக் காணிக்கு 10 அடி அகலமான பிரத்தியேக பாதை யும் உள்ளது.

தொடர்புகளுக்கு : 0774150764, 0776559597 (6028)


## வவுனியா மாமடு...

னும் பலியாகியுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் விநாயகபுரத்தை சேர்ந்த என். சங்கீதா (26 வயது), கற்குழியை சேர்ந்த ஜோசப் ஜென்சி (26 வயது), திருநாவற்குளத்தை சேர்ந்த எஸ். உசாந் (20 வயது) ஆகியோரே என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மாமடு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

இதேவேளை உயிர் தப்பிய யுவதியொருவர் சம்பவம்பற்றி தெரிவிக்கையில்,

நேற்றுக் காலை வேளையில் வவுனியாவில் இருந்து தன்னுடன் மேலும் மூவருமாக நால்வர் பயிற்சி வகுப்பொன்றை நிறைவு செய்து சின்னபுதுக்குளத்தில் உள்ள நண்பியொருவரை பார்வையிடுவதற்காக வந்திருந்தோம். அவ் வேளையில் குளத்தினை பார்வையிடுவதற்கு விருப்பமாக இருந்தமையினால் சின்னபுதுக்குளத்தில் உள்ள நண்பியும் அவருடைய தம்பியையும் அழைத்துக்கொண்டு மாமடு குளத்திற்கு சென்ற சமயம் அங்கிருந்த வள்ளத்தில் ஏறி புகைப்படம் எடுத்துவிட்டு சிறிது தூரம் வள்ளதில் நகர முற்பட்டவேளை அது கவிழ்ந்துது. இவ் வேளையில் நாம் மூவரும் ஒருவாறாக நீந்திக் கரையை சேர்ந்துவிட்ட போதிலும் மற்றையவர்கள் நீரில் மூழ்கி விட்டனர் என கூறினார். (செ-250)

## மேல், தென்...

ஆளும் ஐக்கிய மக்கள் சுத முன்னணி, பிரதான எதிர்க் கட் ஐக்கிய தேசிய கட்சி, முன்னாள் இ தளபதி சரத் பொன்சேகா தலைமை ஜனநாயக கட்சி, மனோ கணேசன் தலை யிலான ஜனநாயக மக்கள் முன்ன உட்பட 25 அரசியல் கட்சிகள் மற்று சுயேட்சைக் குழுக்கள் சார்பாக மொ 3,194 வேட்பாளர்கள் போட்டியிட்டன

## இனிப்பு வழங்கிய

இருந்து மீன்பிடிக்க சென்றிருந்த நூ கணக்கான மீனவர்களுக்கு இல கடற்படையினர் சிறந்த முறையில் சரிப்பை வழங்கியதாக தமிழக மீ சங்கத்தின் தலைவர் எம்ரீட் கூறியுள்

1974 ஆம் ஆண்டு இலங்கைக்கு கப்பட்ட கச்சதீவுக்கு அருகில் மீன் ஈடுபடும் போது இலங்கை கடற்பை தம் மீது தாக்குதல் நடத்துவதாக மீன கடந்த காலங்களில் முறைப்பாடு செய்து வந்தனர்.

அத்துடன் இந்தியா மீனவர்கள் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவே மீன்பிடியில் ஈடுபடுவதாக இலங்கை கு சுமத்தி வந்தது.

ஜெனிவா மனித உரிமை பேரவை கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதி தீர்மானத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டி இந்தியா, தீர்மானம் தொடர்பாக வாக் பில் கலந்து கொள்ளாது வெளிநட செய்தது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை அடுத்து மறுதினம் இலங்கை சிறைக அடைக்கப்பட்டிருந்த 98 இந்திய மீன களை உடனடியாக விடுதலை செய்யு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவி ருந்தார்.

இந்த நிலையில், இலங்கையின் எல்லைக்குள் மீன்பிடிக்க இந்திய மீன களை அனுமதித்துள்ள கடற்படையி அவர்களுக்கு இனிப்பு சிற்றுண்டிக வழங்கியுள்ளனர். (செ-1


### Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101 (C-6930)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்
### மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட் 2014



### முதனிலை சித்தி

செல்வி ஜெயராசா மிருணுஷா

மு/செம்மலை மகா வித்தியாலயம்

வித்தியாலய முகவரியை விளங்க வைத்தவள்,
விஞ்ஞானச் சுடரை அணையாது காத்தவள்,
கல்விச் சாதனையால் பள்ளிக்கும் பயில்வித்த
நல்லாசானுக்கும், ஈன்று வந்த செம்மலை மண்ணுக்கு
தவமிருந்து பெற்ற தாயோடு தந்தைக்கும் புகழோடு
பெருமையும், கீர்த்தியும் சேர்த்த மிருணுஷாவை
கிராமம் பாராட்டி மகிழ்கின்றது.

கிராம அபிவிருத்திச் சங்கம்
செம்மலை

(C-6931)

### தவறுக்கு வருந்துகின்றோம் 30.03.2014 பிரசுரித்த விளம்பரத்தின் திருத்திய விபரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Madurai மதுரை 15800/=RTN | Doha டோகா 25300/=O/W | Singapore சிங்கப்பூர் 28000/=RTN | Dubai டுபாய் 25000/=O/W | France பிரான்ஸ் 82900/=RTN | London லண்டன் 52500/=O/W | Malaysia மலேசியா 30100/=RTN |
| Thiruchy திருச்சி 22100/=RTN | Canada கனடா 103700/=O/W | Germany ஜேர்மனி 87000/= O/W | Bangalore பெங்களூர் 23300/=RTN | Zurich சுவிஸ் 85900/= RTN | Italy இத்தாலி 63600/= O/W | Cochin கொச்சின் 21000/= RTN |

#128 பிறவுண் வீதி யாழ்ப்பாணம். www.nationtravels.com Nation Popular Travels & Tours 0214920920 07730838.. 0114375357


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org